# 14வயதுக்குட்பட்ட சிறுவர்களை வேலைக்கமர்த்த கூடாது

## தெரிவுக்கமிட்டி சிபார்சு

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் 9

இதழ் 25

போன் : 389

National Tamil Daily

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பரா்பவ மாசி 23 ஜுல்கஃ 24 செவ்வாய்க்கிழமை 7-3-67

கொழும்பு, திங்கள்

பதினான்கு வயதுக்குட்பட்ட சிறுவர்களை அல்லது சிறுமிகளை வேலைக்கமர்த்துவது குற்றமாகக் கருதப்பட வேண்டும் என்றும் இவ்வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமிகளுக்கு கட்டாயக் கல்வி வசதி அளிக்கப்பட வேண்டுமென்றும் குழந்தைகள் பாதுகாப்பு பராமரிப்புத் தெரிவுக் கமிட்டி சிபார்சு செய்துள்ளது.

குழந்தைகள் நலன் குறித்தும் அவர்களின் பாதுகாப்பு பராமரிப்பு பற்றியும் விசாரணை நடத்திய தெரிவுக் கமிட்டியின் சிபார்சுகள் நேற்று இரவு செனட் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன. ஐவர் கொண்ட இத் தெரிவுக் கமிட்டிக்கு திரு. சேனநாயக்கா தலைமை வகித்தார். செனட்டர் நடராஜா, செனட்டர் கல்பகே, செனட்டர் ஜி. ஏ. பி. டி. சில்வா, திரு. ஸ்ரீவர்த்தன ஆகியோரும் இக்கமிட்டியில் இருந்தனர்.

தெரிவுக் கமிட்டி தெரிவித்துள்ள சிபார்சுகள் வருமாறு: [5-ம் பக்கம் பார்க்க]

### அண்ணா முதன்மந்திரியானார்

# தமிழ்நாட்டு மந்திரிகள் தமிழில் சத்தியப்பிரமாணம்

## துணை அமைச்சர்கள் உடனடி நியமனம் இல்லை

சென்னை, மார்ச் 7

**தமிழ்நாட்டில் திராவிடமுன்னேற்றக்கழக மந்திரிசபை இன்றுகாலையில் பதவியேற்றது. தமிழ்நாட்டின் முதன்மந்திரியாக திரு. ஸி.என். அண்ணாதுரை பதவிப்பிரமாணம் செய்துகொண்டதும் சக மந்திரிகள் 9 பேரும் சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டனர்.**

பதவியேற்பு வைபவம் சென்னை ராஜாஜி மண்டபத்தில் இன்றுகாலை 10 மணிக்கு நடைபெற்றது.

தமிழ்நாடு கவர்னர் திரு. உஜ்ஜல்சிங், முதன் மந்திரி அண்ணாதுரைக்கு ஆங்கிலத்தில் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். ஆனால் திரு. அண்ணாதுரை தமிழில் தான் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இதனைத் தொடர்ந்து சக மந்திரிகள் அனைவரும் தமிழ் மொழியில் சத்தியப்பிரமாணம் எடுத்தனர்.

தமது மந்திரிசபை முதலில் முக்கிய பிரச்னையான உணவுப் பிரச்னையைக் கவனிக்கும் என்று அவர் கூறினார்,

### மக்கள் சமுத்திரம்

ராஜாஜி மண்டபத்துக்கு வெளியே மக்கள் சமுத்திரம்போல்திரண்டிருந்தனர். முதன்மந்திரி அண்ணாதுரையையும் மற்றையமந்திரிகளையும் பார்ப்பதற்காக மக்கள் காலையிலிருந்தே ராஜாஜி மண்டபத்தைச்சூழ்ந்திருந்தனர்.

### ராஜாஜி ஆசி

முதன்மந்திரியாகப் பதவியேற்றதும் திரு. ஸி. என். அண்ணாதுரை அங்கு வந்திருந்த திரு. ராஜாஜியை சந்தித்து ஆசிபெற்றுக் கொண்டார்.

### இரண்டாவது பட்டியல்

இன்று காலையில் தி. மு. க. மந்திரிசபை பதவியேற்ற பின்னர் முதன் மந்திரி திரு. ஸி. அன். அண்ணாதுரை நிருபர்களுக்குப் பேட்டியளித்தார்.

ஆங்கிலத்தில் ''மெட்ராஸ் ஸ்டேட்'' என்பதை சென்னை ராஜ்யம் என்று குறிப்பிட்ட மந்திரிகள் அனைவரும் 'தமிழ்நாடு' என்ற தமது சத்தியப் பிரமாணங்களின்போது குறிப்பிட்டார்கள்,

சட்ட விதிகளுக்கிணங்க அமைக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டத்தில் உண்மையான நம்பிக்கையும் விசுவாசமும்கொண்டு இந்தியநாட்டின்முழுமுதல் ஆட்சியையும் ஒருமையையும் நிலைநிறுத்துவேன் என்று திரு. அண்ணாதுரை தமது சத்தியப்பிரமாணந்தில் கூறினார். பதவிப் பிரமாணத்தில் 'தமிழ்நாட்டு அரசாங்கத்தின் அமைச்சராக எனது கடமைகளை'' நிறைவேற்றுவேன் என்று அவர்கூறினார்.

அவரைத்தொடர்ந்து திருவாளர்கள் நெடுஞ்செழியன். மு. கருணாநிதி, மதியழகன், ஆகியவர்கள் உட்பட ஒன்பது அமைச்சர்களும் பிரமாணம் எடுத்துக் கொண்டார்கள்.

தேசியகீதத்துடன் வைப [8-ம் பக்கம் பார்க்க]

## ஆசிரியர்களிடையே மூண்ட கைகலப்பு

### டிக்கோயா பஸ்நிலையத்தில் பட்டப்பகலில் நடந்தது

ஹட்டன், திங்கள்

பஸ்நிலையத்தில் ஆசிரியர்கள் கைகலப்பில் ஈடுபட்ட சம்பவமொன்று டிக்கோயாவில் பட்டப்பகலில் நடந்துள்ளது. இச்சம்பவத்தில் சுமார் 50 ஆசிரியர்கள் கலந்து கொண்டார்களாம்.

அகில இலங்கை தோட்டப் பாடசாலை ஆசிரியர் சங்கத்திலிருந்து விலகிய சில ஆசிரியர்கள் மலைநாட்டுத் தமிழாசிரியர் சங்கத்தில் சேர்ந்து கொள்ளும் பொருட்டு அச்சங்கத் தலைவர் தலைமையில் டிக்கோயா சிங்களப்பாடசாலையில் கூடம் கூடியதாகவும் அக்கூட்டத்தில் சில ஆசிரியர்கள், மற்றவர்களைத்தாக்கிப்பேசியதாகவும் இதன் காரணமாக பஸ் நிலையத்தில் கைகலப்பு ஏற்பட்டதாகவும், இச்சம்பவம் பற்றிக்கூறப்படுகிறது.

பஸ் நிலையத்தில் ஆசிரியர்களுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பு நடந்ததென்றும் அச்சமயம் செருப்புகளாலும் குடைகளாலும் ஆசிரியர்கள் தாக்கப்பட்டார்களென்றும் கூறப்படுகின்றது.

## சுதந்திரக்கட்சி பிரமுகர்கள் யாழ்ப்பாண விஜயம்

யாழ்ப்பாணம், செவ்,

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் கோஷ்டியொன்றுஇம்மாதம் 10 ம்திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகிறது. இக் கோஷ்டியில் முன்னாள் மந்திரியொருவரும், இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளார்கள்.

முன்னாள் கல்வி சுகாதார வீடமைப்புமந்திரி ஜனாப் பதியுதீன் மகமத், தெஹியோவிற்ற எம். பி. தனபால வீரசேகர, மூதூர் எம். பி. அப்துல் மஜீத் ஆகியோரும் மற்றும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சிப் பிரமுகர்களும்யாழ்ப்பாணத்திற்கு வருகிறார்கள்.

இஸ்லாமிய சோஷலிஸ முன்னணியின் யாழ்ப்பாணக்கிளை இவர்களை அழைத்திருக்கிறது. அன்று மாலை ஜின்னா மைதானத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் இவர்கள் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுவார்கள்.

யாழ்ப்பாணம் வரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கோஷ்டியில் கொழும்பு மாநகரசபை உறுப்பினர்களும் இடம் பெறுவார்கள். மேலும் சில சுதந்திரக்கட்சி எம். பிக்கள்யாழ்ப்பாணத்திற் குஇக்கோஷ்டியுடன் வர விருப்பம் தெரிவித்துள்ளனராம்.

## ''வடபகுதி இளைஞர்களுக்கு விவசாயம் புதிதல்ல''

### விவசாயப்படை விண்ணப்பங்கள் குறைவுக்கு மந்திரி கூறிய காரணம்

கொழும்பு, திங்கள்

விவசாயப்படையில் சேர விரும்பி ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமான இளைஞர்கள் விண்ணப்பித்துள்ளனர். ஆனால் பதினையாயிரம் இளைஞர்களுக்கு மட்டுமே விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தது.

மேற்கண்ட விபரத்தை இன்று நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் காணி நீர்ப்பாசன

8-ம் பக்கம் பார்க்க

## முஸ்லிம் கலாசார பல்கலைக்கழகம்

### முகம்மதலி பிரேரணை நிறைவேறியது

கொழும்பு, திங்கள்

முஸ்லிம் கலாசாரப் பல்கலைக் கழகம் ஒன்று நிறுவுவதற்கான பிரேரணையொன்று இன்று பார்லிமெண்டில் மூதூர் முதலாவது எம். பி. ஜனாப் முகமதலியால் கொண்டுவரப்பட்டபோது சகல முஸ்லிம் அங்கத்தவர்களுமுட்பட சாதகமாக 30 வாக்குகள்பெற்று இப்பிரேரணை நிறைவேறியது.

எவரும் எதிர்த்து வாக்களிக்கவில்லை. தனிப்பட்ட அங்கத்தவர் பிரேரணையாக திரு. முகமதலி இப்பிரேரணையைக் கொண்டுவந்திருந்தார்.

தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர், ஏ. இரியகொலை இப்பிரேரணை மீது பேசுகையில் சமயரீதியில் பல்கலைக் கழகம் ஏன் இங்கு இயங்க வேண்டும் என்பதற்கான காரணம் தமக்குத்தெரியவில்லையெனவும். வித்யோதய வித்தியாலங்காரா பல்கலைக் கழகங்கள் பேராதனைப் பல்கலைக் கழகரீதியில் தான் இயங்கிவருகின்றன என்று குறிப்பிட்டு எல்லா பல்கலைக் கழகங்களும் கலாசாரப் பல்கலைக் கழகங்கள் தான் என எடுத்துக் கூறினார். தாம் இவ்விதகருத்துக்கொண்டிருந்த போதிலும் சமயரீதியிலான பல்கலைக்கழகங்கள் அமைவதை தாம் எதிர்க்கவில்லை எனத் தெரிவித்தார்.

[8-ம் பக்கம் பார்க்க]

## சட்டசபையில் காங்கிரஸ் கட்சி

சென்னை, மார்ச், 6

தமிழ்நாடு சட்டசபையில் காங்கிரஸ்கட்சி லட்சிய எதிர்க்கட்சியாக செயல்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தில் இது அறிவிக்கப்பட்டது.

மக்களின் நலன்களில் அக்கறைகொண்டு தி. மு. க. அரசாங்கம் சேவை செய்யுமானல் காங்கிரஸின் ஆதரவு அதற்கு இருக்கும் என்று திரு. சி. சுப்பிரமணியம் பேசுகையில் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சேவல் குஞ்சுகள்:
1நாள், 1கிழமை, 1மாதம் 2மாதக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு, விலை நிதானம். அருணா ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1589

ஸ்தாபனம்
நல்ல வியாபாரம் நடைபெறும் நிலையிலுள்ள நவீன பரிசில் மாளிகை, நெல்லியடி, கரவெட்டி, மேற்படி ஸ்தாபனம் உடனடியாக விற்பனைக்குண்டு. நேரில் அல்லது கடிதமூலம் தொடர்புகொள்ளவும். நேரில் மேற்படி ஸ்தாபனத்திற்கு 4 மணிக்குப் பின்வரவும். உரிமையாளர். 2353

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

## விற்பனைக்கு

தென்னந்தோட்டம்
யக்கச்சி கிழக்கில் 180 ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்குண்டு. விலை. ரூ. 80,000/- விபரங்களுக்கு 13/2, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 1602

## தேவை

பெண் நெசவாளர்கள்
பட்டு, பருத்தி நெசவு தொழிற்சாலைக்கு திறமையாக பயிற்சி பெற்ற பெண் நெசவாளர்கள் தேவை. பட்டு நெசவில் தேர்ச்சியுள்ளவர்க்கு கூடிய சம்பளம் கொடுக்கப்படும். நேரில் விண்ணப்பிக்கவும். அதிபர், முருகன் இன்டஸ்றீஸ் லிமிட்டெட், கல்லூரி வீதி, உரும்பிராய். 1600

## காணவில்லை

சாரதி லைசென்ஸ்
கே. சபாரட்ணம் என்பவரின் சாரதி லைசென்ஸ் 5-3-67-ல் அராலி மேற்கில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து உடனடியாக யாழ்ப்பாணம் மில்க்வைற் ஸ்தாபனத்தில் அல்லது ஈழநாட்டுக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1601






# வானொலி நிகழ்ச்சிகள்

### செவ். 7 - 3 - 67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்
பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர் விருப்பம்.
இரவு 6-30 நிலைய ஒலிப்பதிவுகள், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 வீணை, 7-45 ஐ. நா. சிறப்பு நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாதசுரம், 10-15 தேர்ந்த இசை.

# வவனியாவிற்கு வெற்றி

வவனியா, திங்கள்
வவனியாதமிழ்மகாவித்தியாலயக் கோஷ்டிக்கும் புத்தளம் போல்டன் விளையாட்டுக்கழக 'பி' பிரிவுக் கோஷ்டிக்கும் வவனியா தெரிவுக் கோஷ்டிக்கும் புத்தளம் போல்டன் விளையாட்டுக்கழக 'ஏ' பிரிவுக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டிகளில் வவனியா தமிழ் மகாவித்தியாலயம் 3—2 கோல்களால் வெற்றியீட்டியது. இரண்டாவது போட்டியில் வவனியா தெரிவுக்கோஷ்டி 4—2 கோல்களால் வெற்றியீட்டியது. வவனியா நகரசபை மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

## முதலிடம்பெற்றது

நாரந்தனை, ஞாயிறு
தீவுப்பகுதிப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டிகளில் புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலை மாணவர்கள் கீழ்ப்பிரிவிலும் மேற்பிரிவிலும் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

## புதுவருடத்துக்கு பாவனைதுணிமணி

கொழும்பு, திங்கள்
சிங்கள, தமிழ் புதுவருடதினத்தையொட்டி ஏப்ரல் முதல் வாரத்தில் சோஷலிச நாடுகளிலிருந்தும், ஜப்பான், பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளிலிருந்தும் சீ. டபிள்யூ. ஈ. இறக்குமதி செய்யவிருக்கும் 15,000,000 யார் பாவனைத் துணிகள் கட்டாயமாகவிநியோகத்துக்கு வழங்கப்படும் என சி. டபிள்யூ. ஈ. அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## பிரிவுபசாரம்

பண்டத்தரிப்பு, திங்கள்
பண்டத்தரிப்புத் தபால் நிலையத்தில் கடந்த 26 வருடங்களாகக் கடமையாற்றி தற்போது ஓய்வு பெறும் சில்லாலையைச் சேர்ந்த திரு. சவரிமுத்து அந்தோனிப்பிள்ளைக்கு பண்டத்தரிப்புத் தபால் நிலையத்தில் ஒரு பிரிவுபசாரம் நடைபெற்றது.

# இரதமலானையில் சர்வோதய நிலையம் அமைக்கும் வேலை

கொழும்பு, திங்கள்
இரத்மலானையில் அகில இலங்கை காந்திசேவா சங்கம் காந்தியடிகளின் இலட்சியத்துக்கமைய சர்வோதய நிலையமொன்றை நிறுவவிருக்கிறது. கதர் உற்பத்தி, விவசாய அபிவிருத்தி, சிரமதானப்பயிற்சி, அனாதைகள் விடுதி, ஆகிய பல பிரிவுகளைக் கொண்டு இந்நிலையம் அமையும்.

கொழும்பு இந்துக்கல்விச் சபை காந்தி சேவா சங்கத்திற்கு இரத்மலானையில் நன்கொடையாக அளித்துள்ள ஓர் ஏக்கர் காணியில் இந்த நிலையம் அமைக்கப்படவிருக்கிறது. இக்காணியை சென்ற வருடம் ஜூ மாதம் 2-ந்திகதி சிரமதானமூலம் தொண்டர்கள் துப்புரவு செய்தனர். அடுத்து குடிசை கிணறு, வேலி அமைத்தல், உணவு உற்பத்திக்காக நிலத்தைப் பண்படுத்துவதற்கான வேலைகள் இம்மாதம் 22-ந்திக்தி தொடக்கம்26-ந் திகதி வரை நடைபெறவிருக்கும் சிரமதான மூலம் செய்யப்படவிருக்கின்றன.

## திராட்சைச் செய்கை பாதிப்பு

பண்டத்தரிப்பு, திங்கள்
இப்பகுதிகளில் இம்முறை திராட்சை நல்லவிளைச்சலைக் கொடுத்திருந்தும் நோயினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. இம்மாத நடுப்பகுதியிலிருந்து அறுவடை ஆரம்பமாகும்.

## நியமனம்

சுழிபுரம், ஞாயிறு
டாக்டர் எஸ். குமாரசாமி தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலையில் பிரதம டாக்டராக நியமனம் பெற்றுள்ளார்.

# அறிவித்தல்

## தற்காலிக வரி சேர்ப்போர் பதவி வெற்றிடம்

வட்டுக்கோட்டைக் கிராமசபை எல்லைக்குள் இருக்கும் அராலி கிழக்கு, அராலி மேற்கு, அராலி தெற்கு ஆகிய இடப்பரப்பில் உள்ள ஆதனங்களின் பேரால் வரவேண்டிய சோலை நிலுவை வரியை வசூலிப்பதற்கு அப்பிரதேசங்களில் வசிப்போரிடமிருந்து தற்காலிக வரி சேர்ப்போருக்கான விண்ணப்பங்கள் வட்டுக்கோட்டைக் கிராமசபைத் தலைவரால் கோரப்படுகின்றன.

1. வேதனம். வசூலித்து வரும் வரிப்பணத்தில் நூற்றுக்கு 10% வீதம் கொமிசன் கொடுக்கப்படும்.
2. வயது:- விண்ணப்பக்காரர் 20 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
3. தகமைகள் - விண்ணப்பக்காரர்கள்
   1. நன்னடைத்தையும், நற்பண்பும் உடையவராகவும்,
   2. நற்சுகமுடையவராகவும்,
   3. இலங்கைப் பிரஜையாகவும்,
   4. தமிழில் நன்குஎழுதவாசிக்கத் தெரிந்தவராயும்,
   5. மேற்குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட இடப்பரப்பில் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

   வரி சேர்ப்பதில் அனுபவமும், அதுபற்றிய அறிவும் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் விசேட கவனத்திற்குள்ளாகும்.
4. விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 17-3-67-ம் திகதிக்குப் பிந்தாமல் எமக்குக் கிடைக்கக் கூடியதாகத் ''தலைவர் கிராமசபை, வட்டுக்கோட்டை'' என்று விலாசமிட்டு பதிவுத் தபால்மூலம் அனுப்பப்பட வேண்டும்.
5. தெரிவு செய்யப்படும் விண்ணப்பக்காரர் காசுப் பிணையாக ரூபா 200/- செலுத்த வேண்டும்.

தா. சிவகுருநாதன்,
தலைவர்,
கிராமசபை அலுவலகம், வட்டுக்கோட்டை.

கிராமசபை அலுவலகம்,
வட்டுக்கோட்டை,
1-3-1967.

2x6

2472


"ராதா"
சகல ரணக் களிம்பு
(Radha's Universal Oilment)

சகலவித புண்கள், ரணங்கள், காயங்கள், பிள்ளைகளின் கரப்பான்கள், சிரங்குகள், பலவித தோலைப்பற்றிய வியாதிகள் சுலபத்தில் குணமடைகின்றன.

தயாரிப்பாளர்கள்:-
ராதா பொபியூமரி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
[மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே.கே.எஸ். றோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.
''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541
Residence: 7068

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30 6-30, 9-45
...ோயாதினங்களில் 4 காட்சிகள்
சுவீப் ரிக்கற்
[சிங்களம்]

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர்.—விஜயா நடித்த
தொழிலாளி

MANOHARA
JAFFNA
Daily at 6-30, 9-30,
Eddie Jayamanne
Rukmani Devi
in
GAN THERA
[சிங்களம்]

சிவராத்திரியை முன்னிட்டு 8-3-67ல் இருந்து
சம்பூரண மகாபாரதம்
கலரி: சதம் 50

REGAL - JAFFNA
NOW SHOWING
Connie Francis
Harve Presnell
WHEN THE BOYS
MEET THE GIRLS

இப்பொழுது திரையிடப்படுகிறது
கிங்ஸ்லி கொழும்பு | பிளாஸா வெள்ளவத்தை | நவா கொம்பனித்தெரு
விஜயா மட்டக்களப்பு
மற்றும் நாலு திரைகளில்
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
எம். ஆர். ராதா, நம்பியார், நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடிக்கும்
தாயின் மடியில்

இப்பொழுது திரையிடப்படுகிறது
வெலிங்டன்
யாழ்ப்பாணம்
ஜெமினி கணேசன — சாவித்திரி
அசோகன், தங்கவேலு, மணிமாலா
முதலியோர் நடித்த
வல்லவனுக்கு வல்லவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெய்பூரில் எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம்; பொலிசார் கண்ணீர்ப்புகை, தடியடி

## தலைவர்கள் உள்ளிட்டு 130 பேர் கைது

ஜெய்ப்பூர், மார்ச் 7

**ராஜஸ்தானின் பல பகுதிகளிலும் நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. ஜெய்ப்பூரில் நேற்று ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்காகப் பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகித்து பின்னர் குறுந்தடியால் அடித்தனர்.**

ராஜ்ய சட்டசபைத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை பெருத காங்கிரஸ் கட்சியை மந்திரி சபை அமைக்குமாறு ராஜஸ்தான் கவர்னர் கோரியிருந்ததைத் தொடர்ந்தே இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன

ராஜஸ்தான் ராஜ்ய சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி அறுதிப் பெரும்பான்மை பெறவில்லை. சட்டசபையில் 88 ஸ்தானங்களை காங்கிரஸ் கட்சி கைப்பற்றியிருந்தது. எதிர்க்கட்சிகள் 92 ஸ்தானங்களைப் பெற்றிருந்தன.

**130 பேர் கைது**

எதிர்க்கட்சியினரின் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து 130 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். ராஜஸ்தான் சுதந்திராக் கட்சியின் தலைவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவித்தன.

**மகாராஷ்டிரா**

மாகாராஷ்டிராவில் காங்கிரஸ் மந்திரிசபை இன்று மீண்டும் பதவியேற்றது. மந்திரி சபையில் மொத்தம் 16 மந்திரிகளும் 9 துணை மந்திரிகளும் இருக்கின்றனர் முந்திய மந்திரி சபையில் 15 மந்திரிகளும் 10 துணை மந்திரிகளும் இருந்தனர். இம்முறை மந்திரி சபையில் பெண்கள் எவரும் இடம் பெறவில்லை. ஒரு துணை [பெண்] மந்திரி மட்டும் நியமிக்கப்பட்டுள்ளார். முந்திய மந்திரி சபையிலிருந்த இரண்டு மந்திரிகளும். ஒரு துணை மந்திரியும் கைவிடப்பட்டுள்ளனர். புதிதாக மூன்று மந்திரிகள் இடம் பெற்றுள்ளனர்.

**பீஹார்**

பீஹார் முதன் மந்திரிக்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்று டெலிபோனில் வாழ்த்துக்கள் தெரிவித்தார். பீஹாரில் காங்கிரஸல்லாத மந்திரி சபை அமைக்கப்பட்டுள்ளது

பட்னவில் அண்மையில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக விசாரணை நடைபெறுமென்று புதிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

**உத்தரப்பிரதேசம்**

உத்தரப்பிரதேசத்தில் காங்கிரஸல்லாத கலப்பு அரசாங்கமொன்றை அமைக்க எதிர்க்கட்சிகள் முயன்று வருகின்றன.

இங்கு எக்கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறவில்லை.

நேற்று லக்னோவில் கூடிய எதிர்க்கட்சிகள் ஐக்கிய கட்சியொன்றை அமைப்பது என்று தீர்மானித்தன. இக்கூட்டத்தில் ஜனசங், கம்யூனிஸ்ட், சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி மற்றும் சுயேச்சை அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர். இன்று நடைபெறும் இவர்களது கூட்டத்தில் ஐக்கிய கட்சியின் தலைவர் தெரிவுசெய்யப்படுவார்.

**கவர்னர் கூறிய காரணம்**

ராஜஸ்தானில் மந்திரி சபை அமைக்குமாறு கவர்னர், காங்கிரஸைக் கோரியுள்ளார். இதனைத்தொடர்ந்தே இங்கு எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மந்திரிசபை அமைக்குமாறு காங்கிரஸ் கட்சியை தாம் அழைத்திருந்ததற்கு நேற்று இங்கு நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் ராஜஸ்தான கவர்னர் விளக்கம் கொடுத்துள்ளார்.

'ராஜஸ்தான் சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி அறுதிப் பெரும்பான்மைப் பலத்தைப் பெறவில்லை. ஆனால் மற்றைய தனிக்கட்சிகளைவிட பெரும்பான்மை ஸ்தானங்களை காங்கிரஸ் கட்சி கைப்பற்றியுள்ளது. கலப்புமந்திரிசபை அமைப்பதற்கும் வாய்ப்பு ஏற்படவில்லை. இக்கட்டத்தில்நான் ஓர் உதாரணத்தைப் பின்பற்ற வேண்டியநிலைஏற்பட்டது.

1952-ம் ஆண்டு நடைபெற்ற இந்தியப் பொதுத் தேர்தலில் தமிழ்நாட்டு ராஜ்ய சட்டசபையில் காங்கிரஸ் கட்சி அறுதிப்பெரும்பான்மையைப் பெறத் தவறிவிட்டது. அப்பொழுது எதிர்க்கட்சிகள். தாங்கள் காங்கிரஸ் கட்சியைவிட கூடுதலான ஸ்தானங்களை [கூட்டாக] பெற்றிருப்பதாக வாதாடின. ஆனல் என்ன நடந்தது? தமிழ்நாட்டில் மந்திரி சபை அமைக்குமாறு ராஜாஜிக்கு தமிழ்நாடு கவர்னர் அழைப்பு விடுத்திருந்தார். அப்பொழுது நடைபெற்ற தேர்தலில் ராஜாஜி தலைமையிலான [தமிழ்நாடு] காங்கிரஸ்கட்சி அறுதிப் பெரும்பான்மை பலத்தைப் பெற்றிருக்காத போதிலும் கவர்னர் அழைப்புவிடுத்தது ராஜாஜிக்குத்தான். காங்கிரஸ் மந்திரிசபை பதவியேற்றது. ராஜாஜி முதன்மந்திரியானர். இதனைத்தான் இப்பொழுது நான் இங்கு பின்பற்றியுள்ளேன்'' என்று ராஜஸ்தான் கவர்னர் கூறினர்.

---

# கடல் மீது எஃகு "நகரம்"

பகு, மார்ச் 6

எஃகு வீதிகளையும் வீடுகளையும், எண்ணெய் வயல்களையும் கொண்ட கடல் மீதான எஃகு நகரத்தின் மாதிரி ஒன்றை மொன்ரீலில் நடைபெறவிருக்கும் எக்ஸ்போ-67 பொருட்காட்சிக்குச் செல்பவர்கள் காண்பார்கள். அஸர்பைஜானின் தலை நகரான பகுவிலிருந்து சில மைல் தூரத்திலுள்ள இந்த புதுமை நகரின் மாதிரி சோவியத் யூனியனிலிருந்து மொன்ரீலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த எஃகு நகரின் மாதிரிநகர் 100 மடங்குசிறிதான அளவில் அமைந்துள்ளது.

எஃகு நகர வாசிகள் [5 ஆயிரம் பேர்] வாழும் இரண்டு மாடி மனைத் தொடர்களும், எண்ணெய் எடுப்பதற்கான துழைக்கும் கருவிகளும், கிளப்பும், விளையாட்டு மைதானமும், கம்பி வலைகளும் சிறு உருவில் அந்த மாதிரியில் சித்திரிக்கப்பட்டுள்ளன.

17 1/2 ஆண்டுகளுக்கு முன்பு நிர்மாணிக்கப்பட்ட நெவ்டியானே காம்னி அஸர்பைஜானின் மொத்த எண்ணெய் உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கிற்கும் கூடுதலான பகுதியை உற்பத்தி செய்கிறது. இங்கு எண்ணெய் உற்பத்திச் செலவு குடியரசிலேயே மிகக் குறைவாகும்.

---

இலங்கை

# தேயிலைக் கைத்தொழிலின் 100-வது வருட விழா

லண்டன், மார்ச் 6

இலங்கை தேயிலை கைத்தொழிலின் 100-வது வருடாந்த வைபவ நிகழ்ச்சிகளில் ஒன்ருக, ஒரு படக் கண்காட்சி லண்டனில் ஒழுங்கு செய்யப்பட்டது. பிரிட்டனில் பிரபல அமெச்சூர் புகைப்படக் கலைஞர்கள் இங்கு குழுமி இலங்கையின், வனப்புமிக்க காட்சிகளைக் கண்டுரசித்தனர்.

இலங்கையின் முன்னுள் அழகு ராணியான செல்வி ஜெனிபர் பொன்சேகா, செல்வி பிரியானீ படிகமகே, செல்வி புஷ்பா சிரிமான ஆகியோர் இலங்கையின் புராதன உடைகளை அணிந்து இக்காட்சிக்கு வந்திருந்தனர். கண்டிய நடனத்தையும் மக்கள் இங்கு காணக்கூடியதாகவிருந்தது.

லண்டனிலுள்ள இலங்கைத் தூதுவர் சர் லலிதா ராஜபக்ஸாவும், லேடி ராஜபக்ஸவும் முக்கிய விருந்தினர்களாக வருகை தந்திருந்தனர். சர் லலிதா ராஜபக்ஸ, இக்கண்காட்சியை ஒழுங்கு செய்த கழகத்தினருக்கு ஒரு வெள்ளி தேனீர் கெண்டியைப் பரிசளித்தார்.

---

பிரான்ஸ்தேர்தல்

# அதிக ஸ்தானங்களை டிகோல் கட்சி கைப்பற்றியது

## பிரதமர், வெளிநாட்டு மந்திரி வெற்றி

பாரிஸ், மார்ச்6

பிரான்ஸில் நேற்றுநடைபெற்ற தேசிய சட்டசபைத் தேர்தலில் ஜனுதிபதி டிகோலின் கட்சி முன்னணியில் சென்று கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இத்தேர்தல் இரண்டு கட்டமாக நடைபெறுகிறது. முதல் சுற்று வாக்களிப்பு நேற்று இடம்பெற்றது. நேற்றைய வாக்களிப்பில் வாக்காளர்கள் அரைவாசியினர் தங்களது வாக்குகளை அளித்து விட்டனர் என்றும் இதில் 40 சத விகிதம் டிகோல் சட்சிக்கு கிடைத்திருக்கிறதென்றும் இங்கு தெரிவிக்கப்பட்டது. நேற்றைய தேர்தலில் தேசிய சட்டசபையின் 486 ஸ்தானங்களுக்கு வாக்களிப்பு நடைபெற்றது. பிரெஞ்சு பிரதமர் பொம்பிடோ பெரும்பான்மையான வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். வெளிநாட்டு மந்திரியும் வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இத்தேர்தலில் டிகோல் கட்சிக்கு கடந்த தேர்தலிலும் பார்க்க கூடுதலான வெற்றி கிடைக்கும் என்று இங்கு பார்வையாளர்கள் கருத்துவெளியிட்டனர்.

---

# விமான விபத்தில் 60பேர் மாண்டனர்

## பாதையை விட்டு விலகி வீட்டுடன் மோதியது

மொன்ரேவியா, மார்ச்6

லைபீரியா தலைநகர் மொன்ரேவியாவுக்கருகே நேற்று ஏற்பட்ட விமான விபத்தில் அறுபதுபேர் மாண்டனர்.

பிரேஸில் நாட்டு ஜெட் விமானமொன்று மொன்ரேவியாவுக்கு அருகே விமான ஓடுபாதையை விட்டு விலகி சுமார் ஒன்றரை மைல்தூரம் சென்று ஒரு வீட்டுடன் மோதியபொழுது இவ் விபத்து நிகழ்ந்தது. வீட்டுடன் மோதியதில் விமானம்வெடித்து தீப்பற்றி எரிந்தது.

இந்த விமானத்தில் 71 பிரயாணிகளும் 19 விமானச் சிப்பந்திகளும் இருந்தனர். முதலில் கிடைக்கப்பெற்ற செய்திகளின்படி 60 பேர் மாண்டனர் என்று தெரிகிறது.

சன...

### கவர்னர் ஜெனரல் காலமானர்

ஒட்டாவா, மார்ச் 6

கனடா கவர்னர் ஜெனரல் மேஜர் ஜெனரல் மேஜார்ஜ் பிலியஸ் வேனியா நேற்று இங்கு மாரடைப்பால் காலமானர் அவருக்கு வயது 78.

கனடாவின் கவர்னர் ஜெனராக இவர் 1959-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ம் திகதி நியமிக்கப் பட்டார். கனடாவில் கவர்னர்ஜெனரலாக நியமிக்கப்பட்ட முதலாவது கத்தோலிக்கரும் இவரே தான்.

### ராஜாவின் இறுதிச்சடங்கு

மதுரை, மார்ச் 6

நேற்று முன்தினம் காலமான இராமநாதபுரம் ராஜா சண்முகராஜேஸ்வர சேதுபதியின் இறுதிச் சடங்குகளில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர். ராஜாவின் பூதவுடல் நேற்று மதுரையில் தகனம் செய்யப்பட்டது.

### காமன் விழா

கொத்மலை, திங்.

திஸ்பனை -மொரச்சக்கொட்டை தோட்டத்தில் பண்டைத் தமிழர்களின் தொன்மை வாய்ந்த கலைநிகழ்ச்சிகளில் ஒன்ருன காமன்கூத்து விழா எதிர்வரும் 9-ம்திகதி மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கின்றது.

### மாரியம்மன் விழா

கொத்மலை, திங்கள்

கொத்மலையைச் [illegible]ர்ந்த இரா[illegible]த் தோட்டத்தில் மாரியம்மன் திருவிழா மிக விமரி[illegible]சயாகக் [illegible]காண்டாடப் பட்டது.

---

# "வியட்னும்யுத்தம் நீடித்து இரத்தக்களரி ஏற்படலாம்

## குண்டு வீச்சைநிறுத்துவதே ஒரே வழி"

-யுதாண்ட்

நியுயோர்க், மார்ச்6

''வியட்நாம் யுத்தம் நீடிக்கப் போகிறது. இரத்தக் களரி ஏற்படப்போகிறது'' என்று ஐக்கியநாடுகள் தலைமைக் காரியதரிசி யுதாண்ட் எச்சரிக்கை செய்துள்ளார்.

பர்மாவிலிருந்து நேற்று இங்கு திரும்பிய யுதாண்ட், பத்திரிகை நிருபர்களுடன் பேசுகையில் [illegible] கூறினர். வியட்னும் நெருக்கடிகுறித்து பேச்சுவார்த்தை நடைபெறுவதென்றுல் அதற்கு ஒரே வழி குண்டுவீச்சை அமெரிக்கா நிறுத்துவதுதான். வடக்கு வியட்னும் மீதான அமெரிக்க குண்டு வீச்சு நிறுத்தப்படாதவரை வியட்னும் நெருக்கடி குறையாது. குண்டுவீச்சுநீடிக்கும் வரை பேச்சுவார்த்தைக்கு இடமில்லை' என்றும் யுதாண்ட் தெரிவித்துள்ளார்.

---

லண்டன், மார்ச் 6

பிரிட்டனில் முழுநேர கல்வித் திட்டங்களைப் பயின்று வரும் இலங்கை மாணவர்கள், ஈஸ்டர் விடுமுறையின்போது, இங்கிலாந்து, ஸ்கொட்லந்து, வேல்ஸ், வட அயர்லந்து போன்ற இடங்களுக்கு விஜயம் செய்ய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் கவுன்சில் இவ்விஜயங்களை ஒழுங்கு செய்துள்ளது. ஒரு கிழமைவரை நீடிக்கும் இவ் விஜயங்கள் மார்ச் 21-ம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் 2[illegible]-ம் திகதி வரை நீடிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சமயம் என்பது அன்பும் சகோதரத்துவமுமே. வெறும் கோட்பாடுகளும் சடங்குகளுமல்ல. உங்கள் உள்ளத்திலே அன்பும் கருணையுமிருப்பின், நீங்கள் சிறந்த சமயிகள் ஆவீர்கள். இந்தஅன்பாகிற தெய்வம் மூலமே உலகமும் உய்ய முடியும்.

—மிர்ஸா ஏ. தோபார்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna,
Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ ஹு மாசி மீ 23 (7-3-67)

## தமிழ்நாடு மந்திரிசபை

தமிழ்நாட்டில் திரு. சி. என். அண்ணுதுரை தலைமையில், திராவிட முன்னேற்றக்கழக மந்திரிசபை நேற்றுப் பதவியேற்றிருக்கிறது. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் நீண்டகாலமாக இருந்துவரும் தொடர்பும் உறவும் நிலைபெறவும், இருநாடுகளுக்கிடையிலுள்ள சில பிரச்னைகள் சுமுகமாகத் தீரவும் தமிழ்நாட்டின் புதிய அரசாங்கம் உதவியும் ஒத்துழைப்பும் அளிக்குமென்றும், இருநாட்டவருக்கு மிடையில் நட்புறவும் நல்லெண்ணமும் வளருமென்றும் எதிர்பார்ப்போம்.

இந்தியாவில் நடந்து முடிந்த பொதுத் தேர்தல் அங்கு பல மாறுதல்களை ஏற்படுத்தியிருப்பினும், தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றம், இங்கு இதுவரை சென்னையைப் பற்றியே சிந்திக்காதவர்களுக்குக்கூடச் சிந்தனையைத் தூண்டிவிட்டிருக்கிறது. இங்குள்ள அரசியல் தலைவர்கள், தமிழ்நாட்டில் தி. மு. கழகம் ஆட்சிபீடத்துக்கு வந்திருப்பதைக் கண்டு பெரும்பான்மைச் சமூக மக்களிடையே அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தி, அதன் மூலம் ''அரசியல் இலாபம்'' சம்பாதிக்க முனைகின்றனர். அரசியல் கட்சிப் பத்திரிகைகள் சிலவும் இதே முறையைக் கையாள்கின்றன. மக்கள் மத்தியில் பீதியேற்படுத்துவது மட்டுமல்லாது, இங்குவாழும் ஒரு பகுதி மக்களுக்கெதிராகத் துவேஷத்தையும் ஊட்டிவருகின்றன. அரசியலில் எப்பக்கமும் சாராதவர்கள் என்று கூறிக்கொள்ளும் 'தேசீயப் பத்திரிகை'களைச் சேர்ந்தவர்களும்கூட தி. மு. கழகத்தைப் பற்றி சிங்களமக்கள் மத்தியில் பூதாகாரப்படுத்தி பூச்சாண்டிகாட்டுகின்றனர்.

தமிழ்நாடு அரசாங்கம் அகில இந்திய ரீதியில் நாட்டின் பொதுமுன்னேற்றத்துக்காக உழைக்கும் என்று தி. மு. க. தலைவரும், தமிழ்நாடு முதன் மந்திரியுமான திரு. அண்ணுதுரைதெளிவுபடுத்தியிருக்கிருர். அண்ணுதுரையைக் கண்டு அங்கு அஞ்சியவர்கள் கூட, அவரின் மனமாற்றத்தையும் கொள்கை மாற்றத்தையும் கண்டு அவரை ஆட்சிபீடத்துக்குத் தெரிவு செய்து ஆதரிக்கின்றனர். இந்திய மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய மத்திய அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்ளவோ, கொள்கை வகுக்கவோ அதிகாரமில்லாத ஒரு ராஜ்ய அரசாங்கமான தமிழ்நாடு அரசாங்கத்தைக் கண்டு இங்குள்ளவர்கள் அஞ்சுவதற்கு என்ன இருக்கிறது. இந்திய அரசியல் அமைப்பை அறிந்துகொண்டும், அயல்நாடு ஒன்றின் விவகாரத்தில் தமிழ்நாடோ வேறு ராஜ்ய அரசாங்கமோ தலையிட முடியாதென்பதை தெரிந்திருந்தும் இங்கு வீண் புரளி கிளப்பிவிடுவதன் நோக்கம் என்ன? அதன் விளைவு என்னவாகும்? அரசாங்கமும் அரசியல், சமூகத் தலைவர்களும் நாட்டின் அமைதியைக் கருதி ஆராயவேண்டியது அவசியமாகும்.

இந்திய முஸ்லிம் லீக் தலைவர் ஜனுப்இஸ்மாயில் தேர்தலில் வெற்றி பெற்றதைப் பாராட்டி டாக்டர் கலீல் வாழ்த்துத் தந்தி அனுப்பியதைப் பற்றியோ, கேரளத்தில் திரு. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாட் அரசாங்கம் அமைப்பதைப் பாராட்டி திரு.என். சண்முகதாசன் வாழ்த்துத் தந்தி அனுப்பியதையோ எந்தப் பத்திரிகைகளும் சில அரசியல்வாதிகளும் பெரிதுபடுத்தாமல் சில தமிழ்த் தலைவர்கள் அண்ணுதுரைக்கு வாழ்த்துத் தந்தி அனுப்பியதைப் பெரிது படுத்துவது ஏன்?

இங்குள்ள தமிழர்களும் இந்நாட்டு மக்கள் தான். இந்த நாடு தான் அவர்களுக்குத் தாய்நாடு. தாய்நாட்டுக்கு அவர்கள் துரோகம் செய்வார்கள் என எதற்கு எதிர்பார்க்க வேண்டும்? தமிழர்கள் இங்கு திருப்தியுடன் வாழவில்லை என்பதை இந்த அரசியல் வாதிகளும் தி. மு. க.வைக்கண்டு அஞ்சும் பத்திரிகைகளும் ஒப்புக்கொள்கின்றன என்பது தான் இதன் அர்த்தம். தமிழ் மக்களின் அதிருப்தியையும் அச்சத்தையும் நீக்கி அவர்கள் தங்கள் நாட்டில் சுதந்தரமாகச் சம உரிமையுடன் வாழ வழிசெய்ய முன்வந்தால் இந்தப் பீதிக்கு அவசியமில்லை.

தி. மு. க. ஆட்சியைக் கண்டு இங்கு பீதிகொள்ளவேண்டியதில்லை. அந்நாட்டு அரசாங்கத்துடன் நட்புறவுடனும், நல்லெண்ணத்துடனும் நடந்துகொள்வதிலும், இங்கு சிறுபான்மை மக்களுக்கு அவர்களின் நியாயமான உரிமைகளை வழங்குவதிலும் இலங்கையின் நிம்மதி பெரிதும் தங்கியுள்ளது.

# வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தான உற்சவம்

உயர்திரு வைத்தியலிங்கச் செட்டியார் உலகம் புகழும் உத்தமராகவும், கொடைவள்ளலாகவும், நல்லொழுக்கமும் ஆசாரமும் பெருகிப் பக்தசிரோமணியாகி அருளுந் திருவும் பெருக வாழ்ந்து சோழவள நாட்டில் சங்க நந்தி என்னும் திருஊரிலே திருமணம் செய்து சகல சம்பத்துடனும் வாழ்ந்துவரும் நாளில், சகலகலாவல்லுனரும் மகாஞானியுமாகிய கூழங்கைத் தம்பிரான் அவர்கள் ''உன்னை இந்நிலைக்குக் கொண்டுவந்த பரமபிதாவாகிய வைத்தியலிங்கக் கடவுளுக்கும், உலகமாதாவாகிய தையல்நாயகி தேவியாருக்கும் ஆலயம் அமைக்க வேண்டும்'' என்றுகூறிஅருள செட்டியாரும் சம்மதித்து தம்பிரான் குறித்தநிலத்தை வாங்கி 1787-ம் ஆண்டு அத்திபாரம் இட்டு மூன்று வருடங்களுக்குள்ளே ஆலயத்தைக் கட்டிப் பூர்த்தி பண்ணினர். [1790-ம் ஆண்டு] சாதாரண வருஷம் சித்திரை மாசம் பூர்வபக்ஷ சப்தமியோடு கூடிய புநர்பூச நட்சத்திர சுபதினத்தன்று ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமானையும் ஸ்ரீ பாலாம்பிகை [தையல்நாயகி] அம்மையாரையும் பிரதிஷ்டை செய்துவைத்தனர்.

அன்று தொடக்கம் இன்று வரை புராதனப் பெருமையுடன் விளங்கி ''பட்டணத்து சிவன்கோவில்'' என்றுல் தமிழ்நாடு முழுதும் பெருமை கொள்ளும்படி சிறப்பாக இயங்கி வருகின்றது.

அன்று பேரறிஞர்களாலும் சிவாச்சாரியர்களாலும் அதியுன்னதமாக வகுக்கப்பட்ட பூசைக்கிரம உற்சவாதிக்கிரியா முறைகள் இன்றுவரை மாருத பெருஞ்சிறப்போடு பேணப்பட்டு வருகின்ற பெருமை இன்றைய வள்ளல்வைத்தியலிங்கச் செட்டியாரின் பரம்பரை உரிமையாளர்கட்கும் குருக்கள்மாருக்கும் உரியதாகும்.

இந்த அருள் பெருகு திருக்கோவில் இவ்வாண்டு வருடாந்த உற்சவம், பராபவ வருடம் மாசி 23-ந் திகதி [7-3-67] செவ்வாய்க்கிழமை [இன்று] காலை 10 மணிக்குப் பூசையும், 10-30 மணிக்குக் கொடியேற்றமும் நடைபெறுகிறது.

## பொருந்தும் வைத்தீஸ்வரர் நாமம்

பிறை செய் அழகு சிரசாளப்
பெண்ணுள் கங்கை நிலன்நாடச்
சிறைசெய் தடியார் உள்ளத்தைச்
சேரும் வண்ணைத் திருநாதா.

பாதை மாறும் ஒரு ஏழை
பத்திப் புலனில் நொடிவேளை
நாதா காக்க எனமொழிந்தால்
நல்கும் வைத்தீஸ் வரவேந்தா.

காதல் மிக்க அடியார்கள்
கரங்கள் குவியும் விதத்தழகைப்
போதா நயனம் உளம் ஏற்றப்
பொன்செய் வைத்தீஸ்வரநாதா.

பிறவிப் பிணியைத் தீர்த்திடுவான்
பிணையும் பாவம் விலக்கிடுவான்
புரியும் இந்தத் தொழிலாலே
பொருந்தும் வைத்தீஸ் வரநாமம்.

- ''நிலவின்தாசன்''

## இந்தியாவில் ஜனநாயகம் தழைக்கிறது

உலகம் முழுவதும் மிகவும் ஆவலுடன் கவனித்து வந்தஇந்தியப் பொதுத்தேர்தல் போற்றத்தக்க அமைதியோடும் கௌரவத்தோடும் திறமையாகநடைபெற்றது. இதை ஜனநாயக அரசியல் முறைக்குஒருபெரும்வெற்றியென்று கூறலாம். இதன் விளைவாக பலமானதூய்மையான அதிகம் ஜனநாயகத் தன்மைவாய்ந்தஓர்இந்தியா உருவாகியுள்ளதாகத் தெரிகிறது. அரசியல் அமைப்பிலும், கட்சிப் பலத்திலும் உண்டான மாறுதல்கள்ஜனநாயக அரசாங்கத்தில் ஒரு சாதாரண சம்பவம். ஜனநாயகத்தில் ஒரு கட்சியின் நிலைமை எப்போதும் ஒரே மாதிரி இராது. காங்கிரஸ் கட்சியும் இதற்கு விதிவிலக்கல்ல. இத்தேர்தலில் காங்கிரஸின்பலம்சற்றே குறைந்திருப்பதுபோலஅடுத்ததேர்தலிலும் கூடலாம் குறையலாம்.

இந்தியத்தலைவர்கள் இனிமேல்வருங்காலத்தில்நடந்துகொள்ளும் முறையில்தான் இந்தியாவின் வருங்காலமும் தங்கியிருக்கிறது. அதன்நன்மையை விரும்புவோருக்கு சில விஷயங்கள் தட்டுப்படுகின்றன!

[1] உலகின் சகலவிதமான பிணக்குகளுக்கும்சர்வரோக நிவாரணி என்று இந்தியாவால் பிரகடனம் செய்யப்பட்ட சக ஜீவனம் என்ற கொள்கையை முதலில் இந்தியாவிலேயே இந்திய மக்களும்தலைவர்களும்பின்பற்றவேண்டும். இதற்குமுன்இது நடவாதது வருந்தத்தக்கது.

[2] கட்சிகளிடையே ஒற்றுமை இருந்தால் கூடுதலான நன்மை கிடைக்கும். பிஹார் காங்கிரஸ் தலைவர் ஒருவர் கூறியுள்ளார்: 'காங்கிரஸ் ஜனங்களின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். எல்லா எதிர்க்கட்சிகளும் ஒன்றுசேர்ந்து ஒருநிலையான அரசாங்கம் அமைக்கும் பட்சத்தில் நாம் அதற்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்'

பிஹார் தலைவர் சொன்னது இந்தியா முழுவதற்கும் பொருத்தமானது. இந்திய தலைவர்களில் ஒருவராகிய திரு.ஸி.என். அண்ணுதுரை அரசாட்சி புரிவதற்கு சில திறமான கருத்துகளை வெளியிட்டுள்ளார், தேசத்தின் நலனுக்கும் அரசாங்கத்தின் நலனுக்கும் அடுத்து மூன்ருவதாகவே கட்சிநலன் இருக்கவேண்டுமென்று அவர் கூறிஞர். ஜனங்கள் கொடுத்துள்ள வாய்ப்பை கட்சி நலனுக்காக உபயோகிக்கப்படாதுஎன்றும் அவர் சொன்ஞர் சட்டசபைஅங்கத்தவர்கள் அரசாங்க ஊழியர்களை துன்புறுத்தப்படாது. எதிர்க்கட்சியின் அபிப்பிராயத்துக்கு செவிசாய்க்கவேண்டும். காங்கிரஸும் மற்றக்கட்சிகளும்ஒரே குடும்பத்தைச்சேர்ந்தசகோதரர்கள் போல நடந்துகொள்ளவேண்டும்.

சென்னை அரசாங்க கட்சியின் தலைவர் என்ற முறையில் அவர் உப சபாநாயகர் பதவியை எதிர்க்கட்சிக்கு அளிக்க முன்வந்துள்ளார்.

[5-ம் பக்கம் பார்க்க]

## ஐயாறன் எழுதுகிறார்

தமிழ் நாடு தி. மு. க. மந்திரி சபையிலே இந்து தர்மஸ்தாபனங்களின் பொறுப்பை எந்த அமைச்சர் ஏற்றிருக்கிருர் என்று ஆவலுடன் பார்த்தேன். கல்வி, கைத்தொழில் மந்திரியான நெடுஞ்செழியனே இப் பொறுப்பை ஏற்றிருக்கின்ருர்.

அவரது நிர்வாகத்தில் தமிழகக் கோவில்களும், இந்து தர்மஸ்தாபனங்களும் எப்படி இருக்கும்! அவர் கோவில்களுக்குச் சென்று வழிபடுவாரா? என்று பலபல கேள்விகள் என் உள்ளத்தில் எழுந்தன. இதைப் பற்றி ஓர் அன்பரைக் கேட்டதற்கு, அமைச்சரின் மனைவியார் ஒரு டாக்டரென்றும் தெய்வ பக்தியுள்ளவரென்றும். ஆகவே அமைச்சரும் கூட, புதிய பொறுப்பை ஏற்றபின் மனம் மாறலாமென்றும் அவர் தெரிவித்தார்.

முதலில் நாஸ்திகராக இருந்தவர்கள் பலர் மேலான ஆஸ்திகர்களாக மாறியிருப்பதற்கு பலபல சான்றுகளுண்டு. நம்மில் பலருக்கும் கூட வாழ்க்கையிலே அனுபவம் ஏற்பட ஏற்படத்தானே தெய்வ நம்பிக்கையும் பலப்படுகின்றது. நம்மில் பெரும்பாலோரும் வாயளவிலும் வெளிவேஷத்திலும் தானே ஆஸ்திகராக இருக்கிருேம். ஆகவே பலவிதங்களிலும் இப்போது மனம் மாறியுள்ள தி. மு. க. அமைச்சர்கள் ஆஸ்திகர்களாக மாறிஞல் அதைவிடப் பெரிய புரட்சி தமிழகத்தில் ஏற்பட முடியுமா?

ஃ ஃ ஃ

இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி, இந்திய அரசாங்கம் எந்த மதச் சார்புமில்லாதது. அப்படி இருக்க இந்து தர்மஸ்தாபனங்களில் மட்டும் அரசாங்கம் ஏன் குறுக்கிடவேண்டும்? மற்ற மதஸ்தாபனங்கள் விஷயத்தில் தலையிடாமல், இந்து தர்மங்களில் மட்டும் அரசாங்கம் ஒரு தலைப் பட்சமாகக் குறுக்கிடுவானேன்? சமய நம்பிக்கையற்ற ஓர் அரசாங்கத்தின் மேற்பார்வையில் தர்மஸ்தாபனங்கள் நன்கு நடைபெறமுடியுமா? என்பன முக்கிய கேள்விகள்.

தமிழ் மன்னர்கள் ஆட்சியின்போது கோவில் நிர்வாகப் பொறுப்பை துறவிகளைத் தலைவர்களாகக் கொண்ட பல ஆதீனங்களிடமே வெகுவாக ஒப்படைத்தனர். அந்நியர் ஆட்சிக்காலத்திலே மற்ற கோவில்களின் சொத்துக்களை பல ''பூதங்கள்'' விழுங்கிவிட்டன. ஆதீன வசமுள்ள சொத்துக்கள் அப்படியே பத்திரமாக உள்ளன. ஆகவே எல்லாக் கோவில் நிர்வாகமும் ஆதீனங்களிடையே ஒப்புவிப்பது மேலாகும். பல ஆதீனங்களுமடங்கிய ''தமிழக தெய்வீகசபை'' சமீபத்தில் ஏற்பட்டுள்ளது. அச்சபையின் வசம் இப் புனித பொறுப்பை ஒப்புவித்துவிட்டு, சமயச்சார்பற்ற அரசாங்கம் இதிலிருந்து ஒதுங்கிவிடுவதே பலவிதங்களிலும் வரவேற்கத்தக்கதாகும். தமிழகத்திலே இப்போது ஆதீனங்களின் பொறுப்பிலுள்ள கோவில்கள் பலவும்மேலான முறையில் நடந்துவருவது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தின் பெருமை அதன் புராதன கோவில்களில்தான் உள்ளது. இவ்விஷயம் பற்றி புதிய அமைச்

[5-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அண்ணுவருகிருராம்; 'எத்த' அறிவிப்பு

கம்யூனிஸ்ட்சிங்களநாளிதழான 'அத்த' தனது 4-3-67 இதழில், முதற்பக்கத்தலைப்புச்செய்தியாக 'அண்ணுதுரை நாட்டைப்பிரிப்பதற்கு ஆலோசனை அளிக்கவும், தமிழருக்குப் பலமூட்டவும்இங்கு வருவார்' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளதாவது:—

'தமிழரசுக்கட்சியின் அழைப்பில், தி. மு. க. தலைவர் திரு. ஸி. என். அண்ணுதுரை மே மாத முடிவில் இலங்கை வருவார். இங்கு வருவதற்கு அவர் தமது விருப்பத்தை வெளியிட்டுள்ளபோதும், நிச்சயமான திகதி இன்னும் குறிப்பிடவில்லை. ஜனப்பிரதிநிதிகள் சபையில் மாவட்ட சபை மசோதா நிறைவேற்றப்படும் சமயத்தில் இலங்கையில் அவர் பிரசன்னமாயிருக்க அவரைஇங்குகொண்டுவரத் தமிழரசுக்கட்சி எதிர்பார்க்கிறது.

இம்மசோதாவைப் பிரதமர் எப்போது பார்லிமெண்டில் சமர்ப்பிப்பார் என்பது தமிழரசுக்கட்சித் தலைவர்களுக்குஉறுதியில்லை.மசோதாமே அல்லது ஜூன் இறுதிக்குள் சபையில் சமர்ப்பிக்கப்படாவிடின், அரசாங்கத்திலிருந்து ராஜிஞமாச் செய்வதாகத் தமிழரசுக்கட்சி பயமுறுத்தியுள்ளது.'

## தொற்றுநோயால் பீடிக்கப்பட்ட 40 குழந்தைகள் ஆஸ்பத்திரியில்

கொட்டாஞ்சேனை, திங்கள்

இப்பகுதியில் பரவிவரும் தொண்டைக்கரப்பான் என்னும் தொற்று நோய் காரணமாக இப்பகுதியைச்சேர்ந்த 40 குழந்தைகள் தொற்று நோய்தடுப்பு ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த நோய் காரணமாக இங்குள்ள பெற்ருேர்மிகவும் அச்சம் கொண்டுள்ளார்கள். தடுப்பு வேலைகளில் சுகாதாரப் பகுதியினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## பொதுமக்கள் கஷ்டம்

சங்கானை, திங்கள்

சங்கானை விவசாய விஸ்தரிப்பு நிலையத்தில் கடமையாற்றிய ஊழியர் ஒருவர் பல நாட்களுக்கு முன் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டார். ஆனல் இதுவரை எவரும் நியமிக்கப்படாததால் பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான விதைகளையோ அல்லது கமத்தொழில் உபகரணங்களையோ பெறமுடியாது கஷ்டமுறுகிருர்கள்.

## மாஜிஸ்திரேட் இடமாற்றம

வல்வெட்டித்துறை, திங்கள்

பருத்தித்துறை - சாவகச்சேரிமாஜிரேட்டாக கடமையாற்றிய திரு. ஆர். இளைய பெருமா இம்மாதம் தொடக்கம் கொழும்பிற்கு மாற்றப்பட்டுள்ளார். அவரதுஇடத்திற்கு திரு. கே. விககினராஜா இடமாற்றம்செய்யப்பட்டிருக்கிருர்.

## ஆஸ்பத்திரியில் மாணவர்

மீசாலை, திங்

சாவகச்சேரியிலுள்ள ஒரு கல்லூரியில் 7-ம் வகுப்பில் பயிலும் க. தவராசா என்ற மாணவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அக்கல்லூரியைச் சேர்ந்த ஓர் ஆசிரியர் இம்மாணவனைத் தாக்கியதாக, மாணவனின் தந்தை சாவகச்சேரிப் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

ஆசிரியர் கேட்ட கேள்வியொன்றுக்கு மாணவன் பதிலளிக்கவில்லையென்றும், இதனல் ஆத்திரமடைந்த ஆசிரியர் பல தடவைகள் தாக்கியதாகவும் கூறப்படுகிறது. இச்சம்பவத்தைப் பற்றி விசாரிக்கச் சென்ற மாணவனின் தந்தையைக் கல்லூரி அதிபர் பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகவும், பின்பு அவர் பிணையில் விடப்பட்டதாகவும் தெரியவருகிறது.

## சுற்றுலா

பூநகரி, திங்கள்

பூநகரி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த அறுபதுமாணவரைக் கொண்ட குழு வொன்று அதிபர் மு. சிவானந்தம் தலைமையில் கல்விச் சுற்றுலா ஒன்றைமேற்கொண்டது..

இரணைமடுக்குளத்தின் நீர்ப்பாசனத்திட்டம் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஆகியவற்றுக்கும் மாணவர்கள் சென்று பார்த்தனர்.

## பல்கலைக்கழகமாணவர் மூவர் விடுதலை

கண்டி, திங்கள்

பல்கலைக்கழகத்தில் சட்டவிரோதமாகக் கூடிக்குழப்பம் விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு தொடரப்பட்ட வழக்கில், திருவாளர்கள் என். சண்முகரத்தினம், நெவில் பெரேரா, டபிள்யூ. பி. விஜயரத்தினே ஆகிய மூன்று எதிரிகளையும் கண்டி மாஜிஸ்திரேட் திரு. டொக்லாஸ் விஜயரத்தினே, அவர்களுக்கெதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லையென்ற . அடிப்படையில், விடுதலைசெய்தார்.

நான்காவது எதிரியான திரு. சிட்னி ஜயசிங்கே முன்னரே விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்நான்கு எதிரிகளும் டிசெம்பர் 11, 1965-ல் சட்ட விரோதமாகக் கூடியதாகவும், இரு மாணவிகளான செல்விகள் கே. ரணசிங்கா, கேர்லி பண்டாரநாயக்க ஆகியவர்களைப் பேராதனைப் பல்கலைக்கழக வளவிலுள்ள உயிரியல் கட்டிடத்தினுள் பிரவேசிக்கவிடாது தடுத்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

## உணவு உற்பத்தி அதிகரிக்க வழி

உடுப்பிட்டி, திங்

''இப்பகுதியில் பெருவாரியான அரசாங்கக்காணிகள் வெறும் தரிசு நிலமாகவே உள்ளன. இக்காணிகளை அரசாங்கம்ஏழை விவசாயிகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்தால் இங்கு உணவு உற்பத்தி அதிகரிக்கும்'' என்று கரணவாய் தெற்கு உணவு உற்பத்திக்குழுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் திரு. க. வேலாயுதபிள்ளை கூறினர். கரணவாய் மத்தியமகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பாடசாலை அதிபர்கள், கிராமசபை அங்கத்தவர்கள், உணவு உற்பத்தி மேற்பார்வையாளர், கூட்டுறவுப்பரிசோதகர், சுகாதாரப்பரிசோதகர்,பல்வேறுபொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், அதிகாரிகள் ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

## இந்தியாவில்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

'தமது கட்சி மத்திய அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் என்றும் தி. மு. க. தலைவர் சொல்லியிருக்கிருர். ஜனநாயக தத்துவத்தின் சாற்றை பிழிந்து கொடுத்திருக்கிருர், திரு. அண்ணுதுரை. இதை எங்கள் இலங்கை உட்பட பிறநாடுகளும் பின்பற்றலாம்.

சென்ற காலத்தில் தி. மு. க. வின் தோழன் என்று கூறமுடியாத இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை திரு. அண்ணுதுரையின் கருத்துகளை பின்வருமாது போற்றுகிறது.

'தி. மு. க. தலைவர் தமது கருத்து வெளியீடுகள் மூலம் நாட்டின் அரசியல் சிந்தனைகளை ஒரு புதிய ஆரோக்கியமான, நன்மை தரும் வழியில் திருப்பியிருக்கிருர். கடந்த இருபது வருடகாலமாக காங்கிரஸ் ஆட்சிபீடம் காட்ட முடியாத ஒரு வழியை அவர் காட்டியுள்ளார்.'

ஏற்கனவே சில வரவேற்கத்தக்க மாறுதல்கள் காணப்படுகின்றன. மந்திரிகளின் பெரிய மாட மாளிகைகளை விட்டு விட்டு ஏற்கனவே தாங்கள் வசித்து வந்த சிறிய இல்லங்களிலேயே வசித்து வருவதென்று கேரள, மேற்கு வங்காள தலைவர்கள் தீர்மானித்திருக்கிருர்கள். தி. மு. க. மந்திரிகள் முந்திய சம்பளத்தில் அரைவாசியையே வாங்குவதென்று தீர்மானித்திருக்கிருர்கள்.

திரு. அண்ணுதுரை தெரிவித்துள்ள பரந்த மனப்பான்மையும் சகிப்புத்தன்மையும் இலங்கையிலும் பின்பற்றப்படுமென்று நாம் நம்புகிருேம்.

இந்தியாவில் ஒரு புதிய யுகம் பிறந்திருப்பதை தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. இனிமேல்தான் பெரிய விஷயங்கள் நடக்கவிருக்கின்றன. தேர்தல்கள் மூலம் கிடைத்த சிறந்த அனுபவங்களையும் மாறுதல்களையும் கொண்டு சரியான ஜனநாயக உணர்ச்சி தொடர்ந்து நிலவுமானல், டாக்டர் ராதாகிருஷ்ணன், ஸ்ரீ ராஜகோபாலா சாரியார், ஆச்சாரிய விேனபா பாவே, ஸ்ரீ ஜெயபிரகாஷ் நாரயண், திருமதி இந்திரா காந்தி, திரு. ராஜ்மோகன் காந்தி முதலிய பெரும் தலைவர்களை படைத்த ஒரு நாடு மேலும் பன்மடங்கு சீரோடும் சிறப்போடும் விளங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஜனதிபதி, பிரதம மந்திரி தேர்தல்கள் போட்டியின்றி நடைபெறுமென்று எதிர்பார்க்கிருேம். அப்படியில்லையென்று போட்டி ஏற்பட்டாலும் அது நாட்டின் அரசியல் போக்குக்கு இடையூருய் நிற்கமாட்டாதென்று நம்புகிருேம். பூகோள நிலைமை, கலாசாரம் முதலிய பல விதமான தொடர்புகள் இலங்கையையும் இந்தியாவையும் பிணைத்துள்ளன. டாக்டர் ஆனந்தகுமாரசுவாமி, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், வண அநகாரிக தர்மபாலா, திரு. சி. ஜினராஜதாஸா போன்ற இலங்கை பெரியார்களும் இந்தியாவின் பெருமைக்கு உதவியுள்ளார்கள். இன்னும் இந்தியா சகல ஐஸ்வரியங்களும் பெற்று சுபீட்சமாக வாழவேண்டுமென்று இலங்கையர்கள் வாழ்த்துகிருர்கள்.

-- எஸ். சிவசுப்பிரமணியம்

## நெசவுசாலை

மன்ஞர், திங்

மடுரோட்டுக்கு அருகிலுள்ள குஞ்சுக்குளம் என்னும் ஊரில் புதியதொரு நெசவுசாலையும், சிரேஸ்ட பாடசாலையொன்றும் அரசாங்க [illegible]

# வெளிநாடுகளுக்கு இலங்கை முட்டைகள்

## உள்ளூரில் முட்டை விலை குறையும

கொழும்பு, திங்கள்

இலங்கை தனது சுயதேவையை பூர்த்திசெய்யக் கூடிய அளவிற்கு முட்டை உற்பத்தியில் முன்னேற்றம் அடைந்துவிட்டது. விரைவில் முட்டைகளை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதுபற்றியும் விற்பனை இலாகா திட்டமிட்டுவருகிறது.

விற்பனை இலாகாவின் குளிர்சாதனநிலையத்தில் தற்பொழுது 17 லட்சம் முட்டைகள் சேமித்துவைக்கப்பட்டிருக்கின்றன, முட்டை உற்பத்திகாலம் முடிவடைந்த பின்னர், ஏப்ரல் மாதத்தில் சுமார் 40 லட்சம் முட்டைகளை சேமித்து வைக்கமுடியுமென விற்பனைஇலாகா எதிர்பார்க்கிறது.

முட்டை உற்பத்தி அதிகரிப்புகாரணமாக, முட்டையின் விலையை குறைப்பதற்கு விற்பனை இலாகா தீர்மானித்துள்ளது. பல்வேறு பிரிவான முட்டைகளின் விலைகளில் 2 சதம் குறைக்க, விற்பனை இலாகா முடிவுசெய்திருக்கிறது. விலை குறைக்கப் பட்டபின், முட்டையின் விலை 15 சதத்திலிருந்து 20 சதம் வரை இருக்கும். தங்களுக்குத் தேவையான முட்டைகளை விற்பனை இலாகாவிடமிருந்து வாங்கும்படி எல்லா ஹோட்டல்களுக்கும், கடைகளுக்கும், விற்பனை இலாகா கமிஷனர் திரு. கே. பி. தகநாயக்கா வேண்டுகோள் விடுத்துள்ளார். இதன் மூலம் முட்டைகளினல் தயாரிக்கப்படும் உணவுப் பண்டங்களின் விலைகளை குறைக்கமுடியும் என்றும் அவர் யோசனை கூறியுள்ளார்.

## 14 வயதுக்...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

ஃ 14 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமிகளை வேலைக்கமர்த்துவது குற்றமாக்கப்படவேண்டும். வீடுகளிலோ அல்லது தொழிற் சாலைகளிலோ கடைகளிலோ வேறு ஸ்தாபனங்களிலோ இவர்களை வேலைக்கமர்த்தக்கூடாது.

ஃ இந்த வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமிகளுக்கு கட்டாயக் கல்வி அளிக்கப்படவேண்டும். பதினைந்து வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமிகளை பாடசாலைக்கு அனுப்பாமல் வீட்டில் வைத்திருக்கும் பெற்ருேர் மீது சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். குற்றம் காணப்படும் பெற்ருேருக்கு அபராதம் அல்லது சிறைத்தண்டனை வழங்கப்படவேண்டும்.

ஃ நடைபாதைகளில் சிறுசிறு வியாபாரம் நடத்துவதற்குசிறுவர்களுக்குஅனுமதியளிக்கக்கூடாது. வீதிகளில் சிறுவர்கள் வியாபாரம் நடத்துவது தடைசெய்யப்படவேண்டும்.

ஃ கஷ்டப்படும் சிறுவர் சிறுமிகளுக்கு வேலைவாய்ப்புகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஃ வீடுகளில்சட்டவிரோதமாக வேலைக்கமர்த்தப்பட்டுத் துன்புறுத்தப்படும் சிறுவர், சிறுமிகள் குறித்துப் பொலிசாருக்குத் தகவல் கொடுப்பதற்குத் தொண்டர் ஸ்தாபனங்கள் நியமிக்கப்படவேண்டும்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சர் நெடுஞ்செழியன் ஒரு விவரமான அறிக்கையை வெளியிடுவது; இதுபற்றி இந்துமக்களுக்கிடையிலுள்ள சந்தேகங்களையும் பீதிகளையும் நீக்க உதவும். தமிழக கோவில்களுக்கு ஈழமுள்ளிட்டு இந்துஉலகமனைத்திலிருந்தும் பக்தர்கள் வழிபடச்செல்லுவதால், இதில், மற்ற நாடுகளிலுள்ள இந்துக்களுக்கும் கவலையும் அக்கறையும் அதிகமுண்டு.

ஃ ஃ ஃ

உள்ள முள்கி யுகந்து சிவனென்று
மெள்ள வுள்க வினைகெடு மெய்ம்மையே
புள்ளினர்பணிபுள்ளிருக்கு [illegible] வேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே.

— அப்பர்சுவாமிகள்.

[உள்ளத்தால் உள்ளி உவப்புற்று ''சிவன்'' என்று மெல்ல உள்கினர் வினைகள் கெடுதல் மெய்மையே. சம்பாதி, சடாயு ஆகிய பட்சிகளால் பணிகின்ற புள்ளிருக்கு வேளூர் வள்ளல் பாதம் வணங்கித் தொழுவீர்களாக]

## சித்தாண்டி முக்கொலை வழக்கு

### 3-ம் எதிரி விடுதலை

மட்டக்களப்பு, திங்கள்

சித்தாண்டி முக்கொலை வழக்கு நேற்று மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மூன்ரும் எதிரியான வேலாயுதத்தை விடுதலை செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

நேற்றைய விசாரணையின் போது சப் இன்ஸ்பெக்டர் குமாரவேல் பத்மநாதன், சீதேவி கிருஷ்ணபிள்ளை சாட்சியமளித்தனர். மேல் விசாரணை 19-ந் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## முல்லைத்தீவுக்கு நவீனதபால் நிலையம்

முல்லைத்தீவு. திங்கள்

முல்லைத்தீவில் நவீன வசதிகளைக் கொண்டதபால் நிலையமொன்று விரைவில் அமைக்கப்படவிருக்கிறது.

முல்லைத்தீவு தபால்நிலையம் கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக வாடகை வீட்டிலேயே இயங்கி வருகின்றது. முல்லைத்தீவில் ஒரு நவீன தபால் நிலையத்தை அமைத்துத் தரும்படி வவுனியா, எம். பி. திரு தா. சிவசிதம்பரம்தபால் தந்தி அமைச்சரை பலதடவைகள்கோரியதைத் தொடர்ந்து ஒருலட்சம் ரூபா செலவில் ஒருநவீன தபால்நிலையத்தை முல்லைத்தீவில் நிறுவ தபால் இலாகா முன்வந்துள்ளது, இதுசம்பந்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## ஆட்சேபர்

சுழிபுரம், திங்கள்

யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களுக்கு இதுவரையும் வானெலியில் மாதம் ஒரு நிகழ்ச்சி கிடைத்து வந்தது. ஆனல் இந்த மாதம் தொடக்கம் நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனை ஆட்சேபித்து யாழ். மாவட்ட சனசமூகங்களின் சமாஜம் ஓர் ஆட்சேப மனுவை வானெலி கூட்டுத்தாபன அதிபருக்கு அனுப்பியுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பிரயாணிகள் கஷ்டம்

நாரந்தனை; திங்கள் காலை 7-40க்கு முன் நாரந்தனை ஊடாகஒரு பஸ்ஸும் செல்லாததால் இப்பகுதியிலிருந்து காலை நேரங்களில் யாழ்ப்பாணம் செல்ல விரும்புபவர்கள் ஊர்காவற்றுறையிலிருந்து சுருவில் ஊடாகப் புளியங்கூடலை அடைந்துஅங்கிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பஸ்ஸில்செல்லவேண்டியிருக்கிறது. இந்தப் பஸ்ஸில் செல்வதற்காக நாரந்தனை பகுதி மக்கள் வெகுதூரம் நடந்து செல்ல வேண்டியுமிருக்கிறது.

## கூட்டத்தை நடத்துமாறுகோரிக்கை

யாழ்ப்பாணம், செவ், சுன்னுகம் புதிய கூட்டுறவு பேக்கறி சங்கத்தின்நிர்வாக சபைக்கூட்டம் கடந்த நான்கு மாதங்கள் நடைபெறவில்லையென்றும்அதனை உடனடியாகக் கூட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரி பல அங்கத்தவர்கள் கையெழுத்திட்டு யாழ். மேற்கு உதவி ஆணையாளருக்கு மகஜர் சமர்ப்பித்துள்ளனர்.

## இடமாற்றங்கள்

சுன்னுகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர் திரு. எஸ். சிவஞானஐயர் கந்தரோடை தமிழ் கந்தையா உபாத்தியாயர் பாடசாலைக்கும், உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் முப்பத்தைந்து ஆண்டு காலமாக ஆசிரியராகப்பணிபுரிந்ததிருமு. நடராசா மல்லாகம் அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம் அரசினர் விற்பனவு இலாகா ஊழியர் திரு. வா. முத்துக்குமாரசாமி திருக்கோணமலை அரசினர் விற்பனவு இலாகாவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## விவசாயிகளுக்கு வசதி

வவனியா, திங்கள் வவனியாவில் உபஉணவுப் பொருள்களையும் நெல்லையும் கூடுதலாக உற்பத்தி செய்வதற்கு ஊக்கம்அளிக்கு முகமாக வவனியா அரசாங்க அதிபர் விவசாயிகளுக்கு மேலும் வசதி செய்து கொடுக்க திரு.வி.ஸி. பெரேரா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இங்குள்ள விவசாயிகள் விரைவில் தமக்குத் தேவையான பசளையைப் பெறுவதற்கு அரசாங்க அதிபர் ஏற்ற ஒழுங்குகள் செய்துள்ளார். இதனுல் விவசாயிகள் விவசாயத்தை தொடர்ந்து செய்ய வாய்ப்பிருக்கும்என நம்பப்படுகிறது.

## ஏமாற்றம்

சங்கானை, திங்கள் சங்கானையில் உள்ள விவசாய விஸ்தரிப்பு நிலையத்தில் விவசாயப் படக்காட்சியை ஒழுங்கு செய்யச் செல்லும் பாட்சாலைகள், விவசாயக் குழுக்கள்உள்ளூர் ஆட்சிமன்றங்கள்ஆகியன ஏமாற்றத்துடன்திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்விலாகாவிற்குச் சொந்தமான படக்காட்சி காண்பிக்கும் இயந்திரம் பலமாதங்களுக்கு முன்னர் பழுதடைந்து மேலிடத்திற்கு அனுப்பி திருத்துவதற்காக வைக்கப்பட்டது. இதுகாலவரை அது திரும்பி வராததாலேயே இவ்வித ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது

## கட்சிப்பலகை அகற்றியவழக்கு

### எதிரி விடுதலை

மாவிட்டபுரம், திங்கள் 'எனது மடத்திற்கு முன்னுல் உள்ள தமிழரசுக்கட்சி விளம்பரப்பலகையை கழற்றவேண்டுமென கடவுளைப் பிரார்த்தித்து வந்தேன்' என்று கிராமசேவகர் ஒருவர் தமிழரசுக்கட்சி விளம்பரப்பலகையை அகற்றுவதற்கும் சேதப்படுத்தியதற்கும் உடந்தையாகஇருந்தார் என குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட ஒரு வழக்கில் சாட்சியமளித்த மாவிட்டபுரம் சின்னப்புமடமனேஜர் திரு.என்.வி. சங்கரப்பிள்ளை கூறினுர்.

இவ் வழக்கில் காங்கேசன் துறையைச் சேர்ந்தவரும், கிராமசேவகருமான சின்னத்தம்பி குருநாதபிள்ளைஎன்பவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ். ஸ்ரீதரனின்அனுசரணையுடன் திரு.ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானர். நீதிபதி விசாரணையை இடையில் நிறுத்தி எதிரியை விடுதலை செய்தார்.

## மகாசிவராத்திரி விழா

கண்டி கட்டுகலை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்தில் மகாசிவராத்திரியை முன்னிட்டு 9-ந் திகதி இரவு இந்தியாவிலிருந்து இலங்கை வந்துள்ள திருப்புகழ்மணியின் மகன் திரு. தியாகராஜாவின் சங்கீதகதாப்பிரசங்கம் நடைபெறும். இரவு சங்காபிஷேகமும் விசேஷ பூசையும் நடைபெறும்.

ஃ

மயிலிட்டி ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் இம்மாதம் 9-ந் திகதி இரவு 7 மணி தொடக்கம் அதிகாலை 5 மணி வரை மயிலை இந்து அறநெறிக் கழகத்தின் ஆதரவில் மகாசிவராத்திரிவிழா நடைபெறவிருக்கிறது. சொற்பொழிவுகளும் சங்கீதக்கச்சேரியும் நிகழ்ச்சிகளில் இடம் பெறுகிறது.

நுணுவில், திங்கள் நுணுவில் வீரபத்திரர் ஆலயத்தில் சிவராத்திரி விழா கொண்டாட ஏற்பாடாகியுள்ளது. மணங்குணய் விநாயகர் ஆலயம், பேச்சி அம்மன் ஆலயம், வேதக்கேணிக் கந்தர் ஆலயம், அக்கினி வைரவர் ஆலயம், நுணுவில்குளம் கண்ணகி அம்பாள் ஆலயம் ஆகியவற்றிலிருந்து சுட்டுப் பிரார்த்தனைக் குழுக்கள் நடைபஜனையாக வீரபத்திரர் ஆலயத்தை வந்தடையும். 4 சாமமும் விசேட அபிஷேக ஆராதனைகளும், பிரார்த்தனைகளும், உபன்யாசங்களும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

ஃ

யாழ்ப்பாணம், ஞாயிறு பருத்தித்துறை அத்தியடிப் பிள்ளையார் கோவிலில் மகாசிவராத்திரி விழாவைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. பண்டிதர், பொன். கிருஷ்ணபிள்ளை தி.ரு. சே. வேல்முருகு ஆகியோர் சமயப்பிரசங்கங்கள் செய்வார்கள்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவிலில் மகா சிவராத்திரி விழா கொண்டாடப்படும். சிவ ஸ்ரீஐ. கைலாசநாதக்குருக்கள், திரு. ச பா. ஆனந்தர், பண்டிதர் வித்துவான் சி. குமாரசாமி, பண்டிதர் வித்துவான்க. குகதாசன் ஆகியோரும் உபந்நியாசம் செய்வார்கள்.

## குடிநீர்ப்பிரச்னை

நாராந்தனை, திங் ஊர்காவற்றுறை புங்குடுதீவு எழுவைதீவு ஆகிய இடங்களில் குடிநீர்ப்பஞ்சம் ஏற்பட்டுள்ளது

## தடுப்பு மருந்து

கோண்டாவில். திங்கள் சுகாதாரப்பகுதியினர்இங்குள்ளசகல பாடசாலைகளுக்கும்வீடுகளுக்கும் சென்று குழந்தைகளுக்கு 2வது முறையாக இளம்பிள்ளைவாத தடுப்பு மருந்து கொடுத்தனர்.


# யாழ்ப்பாண வாசிகளுக்கு 500 பிளட்டினம் பி. பி. பி. பேனைகள் இலவசம்



6 பெரிய சைஸ் அல்லது 10 ஸ்டான்டர்ட் சைஸ் போர்ஹான்ஸ் வெற்றுப் பெட்டிகளை போர்ஹான்ஸ், மே/பா. த. பெ. 1031, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பும் முதல் 500 யாழ்ப்பாண வாசிகள் ஒவ்வொருவருக்கும் விசேட போர்ஹான்ஸ் அன்பளிப்பாக ஒரு பிளட்டினம் பி.பி.பி. பேனை இலவசமாக அளிக்கப்படும்.

*எப்பொழுதும் பாவியுங்கள்*

# போர்ஹான்ஸ்

பற்பசை

புகழ்பெற்ற பல்வைத்தியரின் தனித் தயாரிப்பின் முறைக்கு தயாரிக்கப்பட்டது.

உங்கள் பற்கள் முளைப்பதற்குப் பல மாதங்கட்கு முன்பே பல்லீறுகள் தோன்றின. ஆரோக்கியமான ஈறுகளிலிருந்தே வலியபற்கள் தோன்றும். இவ்வலிய பற்கள் உங்கள் ஈறுகள் ஆரோக்கியமாக இருக்கும் வரை திடமானவையாக இருக்கும்.

நிச்சயமாக உங்களுக்கு உரமான வெண்ணிறப் பற்களும், உறுதியான ஆரோக்கிய முற்ற ஈறுகளும் வேண்டுமென்றல், பற்பசையில் நுரை பொங்குதல் மட்டும் போதாது உங்கள் பற்களை வெண்மையாகச் சுத்தஞ் செய்வதற்கும் ஈறுகளை உரம் பெறச் செய்வதற்கும் போர்ஹான்ஸ் பற்பசையின் பாதுகாப்பு உங்களுக்கு இன்றியமையாதது.

இவ் விலவச அன்பளிப்பு மார்ச் 31ஆம் திகதியோடு முடிவடைகிறது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “மார்மைட் நீச்சல் பழகும்” இயக்கம் யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம்

'மார்மைட்' ஆதரவில், இலங்கை அமெச்சூர் நீச்சல் சங்கத்தினல் நடாத்தப்படுவதும், யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணம் வை. எம். ஸி. ஏ. யினல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுமான 'மார்மைட் நீச்சல் பழகும்' இயக்கத்தில் குறிப்பிடத்தக்க உற்சாகம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவுகிறது.

ஒரு வாரத்துக்கு முன், காங்கேசன்துறை அபிவிருத்திக் கம்பனியின் கப்பல் தொழிற்சாலைக்கு எதிராகவுள்ள கடற்பகுதியில் 10க்கும் 16 வயதுக்குமுட்பட்ட 75 சிறுவர்கள் தமது முதலாவது, பாடத்தைக் கற்றபோது, இந்த இயக்கம் அங்குரார்ப்பண மாகியது. பிரதான பயிற்சியாளர் திரு. கே. வி. குருப்பு தலைமையிலுள்ள நீச்சல் சங்கப்பயிற்சியாளர் தவிர, அவர்களுக்கு உதவியாகவும், தாமும் பயிற்சியாளர்களாகப்பயிற்சி பெறும் கூடுதலான நோக்கத்துடனும், யாழ்ப்பாணம் வை. எம்.ஸி.ஏ. யும் மூன்று ஆசிரியர்களை ஒழுங்கு செய்திருந்தது. யாழ்ப்பாணம் வை. எம். ஸி. ஏ. சார்பில் திரு. எம். ஐ. நவரத்தினராஜாவின் சிறிய பேச்சுக்கும், அதற்கு நீச்சல் சங்கத்தலைவர் திரு. கிரெக்ரொஸ்கோவ்ஸ்கியின் சுருக்கமான பதிலுக்கும் பின்னர், நீரில் இறங்குவதற்கு அனுமதிக்க முன், அவர்கள் அவதானிக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளையும், முன்னெச்சரிக்கை முறைகளையும் பற்றிச் சிறுவர்களுக்கு விளக்கப்பட்டது. பிரசன்னமாயிருந்த ஆறு வயதுவந்தோரினதும் அவதானமான பார்வையின்கீழ், முதலாவது பாடம் உற்சாகத்துடன் ஆரம்பமாகியது.





யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 'மார்மைட நீச்சல் பழகும்' இயக்கத்தின் முதலாவது பாடம் ஆரம்பமாகுமுன், நீச்சல் சங்கப் பயிற்சியாளர்கள், யாழ்ப்பாணம் வை. எம். ஸி. ஏ.யைச் சேர்ந்த திருவாளர்கள் எம். ஐ. நவரத்தினராஜா, எஸ். அரியராஜா ஆகியோருடன் சம்பாஷிக்கின்றனர்.

முதலாவது பாடத்தின் நோக்கம், சிறுவர்கள் மத்தியில் தன்னம்பிக்கையை ஊட்டி அவர்களது நீர்ப்பயத்தை அகற்றுவதாகும். சிறுவர்களை நீரில் விளையாடி மகிழ்வுற விட்டு, நீருடன் அவர்கள் உறவு பூண உதவியதன் மூலம் இந்நோக்கம் நிறைவேற்றப்பட்டது. எழுபத்தைந்து ஒரு பெரிய எண்ணிக்கையாகத் தோற்றினும், 'நீச்சல் பழகும்' இயக்கத்தில் கலந்து கொள்ள மேலும் பலரும் விசாரித்திருந்தனர். ஆனல், போக்குவரத்துச் செலவை முன்னிட்டு, யாழ்ப்பாணத்தில். இயக்கத்தின் ஒழுங்கு சபையான யாழ்ப்பாணம் வை. எம். ஸி. ஏ. இந்தத் தொகையை 75க்குக்கட்டுப்படுத்த வேண்டியேற்பட்டது. எனினும், 'மார்மைட் நீச்சல் பழகும்' இயக்கத்தில் கலந்துகொள்ளும் பிள்ளைகளின் பஸ் பிரயாணத்துக்கு இ. போ. ச. விடமிருந்து சலுகைக்கட்டணம் பெறலாம் என நம்பப்படுகிறது. ஆகவே, யாழ்ப்பாணத்தில் எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் 'மார்மைட் நீச்சல் பழகும்' இயக்கங்களில் நூற்றுக்கணக்கானேர் கலந்து கொள்வர் என யாழ்ப்பாணம் வை. எம். ஸி. ஏ. எதிர்பார்க்கிறது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து திரும்புவதற்கான பயிற்சியாளர்களின் செலவைப் பொறுப்பேற்றுள்ள 'மார்மைட்' டினருக்கு யாழ்ப்பாணம் இளைஞர் கடமைப்பட்டுள்ளனர். தனது கப்பல் தொழிற்சாலையையும், தனது கப்பல்களை வெள்ளோட்டம் செய்ய உபயோகிக்கப்படும் சிறிய செயற்கைத் துறைமுகத்தையும் 'நீச்சல் பழகும்' இயக்கத்தின் வசதிக்குத் தந்துதவியதின் மூலம், திரு. ஏ. ஐ. இராஜசிங்கம் முழுமனத்துடன் ஒத்துழைத்துள்ளார். யாழ்ப்பாணம் வை. எம். ஸி. ஏ. யைச் சேர்ந்த திரு. நவரத்தினராசா, திரு. இராஜசிங்கம் ஆகியோர் மிகக்கடினமாக உழைத்துள்ளனர். 'மார்மைட் நீச்சல் பழகும்' இயக்கங்கள் பற்றிய மேற்கொண்ட தகவல்களை இவ்விருவரிடமும் மே/பா யாழ்ப்பாணம், வை. எம். சி. ஏ. என்று எழுதி அறிந்து கொள்ளலாம்.



'மார்மைட் நீச்சல் பழகும்' இயக்கத்தின் முதலாவது படம், தன்னம்பிக்கையை ஊட்டி, நீரின் பயத்தைப் போக்குவதாகும். அண்மையில் நடாத்தப்பட்ட யாழ்ப்பாணம் வை. எம். ஸி. ஏ. 'நீச்சல் பழகும்' இயக்கத்தில் கலந்து கொண்ட மாணவர்கள், பயிற்சியாளர்களின் கண்காணிப்பின்கீழ், மகிழ்ச்சியுடன் நீரில் துள்ளி விளையாடுவதை இங்கு காணலாம். இப்படி விளையாட்டின்மூலம், நீருடன் நட்புக் கொள்ள மாணவர்கள் பழகுகிருர்கள்.




யாழ்ப்பாணத்தில் 'மார்மைட் நீச்சல் பழகும்' இயக்கம் ஆரம்பமாவதற்கு சற்று முன்னதாக, நீச்சல்சங்கப் பயிற்சியாளர்களும், யாழ்ப்பாணம் வை. எம். ஸி. ஏ. உத்தியோகத்தர்களும், 75 மாணவர்களுடன் மகிழ்ச்சியுடன் காணப்படுகிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### “மாமைட் நீந்தப்பழக்கும் இயக்கம்”

மாமைட்டின் ஆதரவின் கீழ், யாழ்ப்பாண இளம் கிறீஸ்த வாலிபர் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டு, இலங்கை அமெச்சூர் நீச்சற்கழகத்தினரால் நடாத்தப்படும் மாமைட் நீந்தப் பழக்கும் இயக்கத்தின் நீச்சற் போட்டியும், சான்றிதழ் வழங்கலும், காங்கேசன் துறை விருத்தித் தாபனத்தின் ஓடக்கரைக்கு முன்னுகவுள்ள கடற்கரையில் நடைபெறும்.

நேரம்: மாலை 4-30.

திகதி: மார்ச் 10.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வி. எம் அபயசேகரா அவர்களும் திருமதி அபயசேகர அவர்களும் பிரதம விருந்தினர்களாக இருப்பர்.

பொதுமக்கள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

2470

### பதுக்கல் பொருட்கள் கைப்பற்றப்பட்டன

கொத்மலை, திங்க

கொத்மலையைச் சேர்ந்த சங்கிலிபாலம், ரோஜ கம், பூண்டுலோயா, ஆகிய இடங்களில் நுவரெலி உணவுக் கட்டுப்பாட்டு காரியால் நடத்தப்பட் திடீர் வேட்டையில் மி காய், அரிசி, கொத்தமல் ஆகியபொருட்கள் கைப்பற்றப்பட்டன.

## தமிழ்நாடு மந்திரிகளின் வாழ்க்கைக்குறிப்பு

### திரு. சி. என். அண்ணாதுரை

[முதல் மந்திரி]

இவர் 1909ல் பிறந்தார். காஞ்சிபுரத்தில் தமது ஆரம்பக் கல்வியைப் பயின்ற பின், இவர் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து, 1935ல் எம். ஏ. பட்டம் பெற்றார்.

ஈ. வே. ரா. பெரியார் 1944ல் திராவிடக்கழகத்தை உருவாக்கியபோது திரு. அண்ணாதுரையும் ஓர் அங்கத்தவரானார். அவர் பொதுக் காரியதரிசியாக்கப் பட்டதுடன் 'விடுதலை' என்ற பத்திரிகைக்கு ஆசிரியருமானார். 1949ல் பெரியாருடன் ஏற்பட்ட அபிப்பிராயபேத விளைவாக, திரு. அண்ணாதுரையும் அவருடைய நெருங்கிய சகாக்களும் பிரிந்து சென்று திராவிடமுன்னேற்றக்கழகத்தை ஸ்தாபித்தனர்.

அரசியலில் இறங்கிய பின் திரு. அண்ணாதுரை ஏழு தடவை சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

ஆங்கிலத்திலும், தமிழிலும் இவர் ஒரு சிறந்த பேச்சாளர். இவர் பல நூல்களை எழுதியுள்ளார். சினிமாப் படக் கதைவசனமும் எழுதியுள்ளார்.

### திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்

[கல்வி மந்திரி]

தி. மு. க. ஆரம்பித்த நாட்தொட்டுஇவர்பொறுப்பான பதவிக வகித்து வந்துள்ளார். உதவிக்காரிய தரிசியிலிருந்து 1955-ல் பொதுக்காரியதரிசியாகவும் 1960-ல் கட்சியின் அக்கிராசனராகவும் பதவிஏற்றார். சென்ற சட்டசபையில் எதிர்க்கட்சித் தலைவராகவும், பொதுக்கணக்குக் குழுத் தலைவராகவும் இருந்தார். 'நம்நாடு' என்ற தி. மு. க. பிரசாரத் தினசட்டின் ஆசிரியரானஇவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டதாரியாவார்.

### திரு. மு. கருணாநிதி

[மராமத்துமந்திரி]

தி. மு. க.வின் சக்தி வாய்ந்த பேச்சாளர்களில் ஒருவர். 19 7 தொடக்கம் சட்டசபைக்குத் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கட்சியின் பொருளாளர். பத்திரிகையாளர், நடிகர், நாடக ஆசிரியர், இவர் சிறைக்குப் பல தடவை சென்றுள்ளார்.

1924-ல் பிறந்த இவர், திருவாரூர் உயர்நிலைப்பள்ளியில் கல்விகற்றார். தமிழ்த் தினசரி 'முரசொலி'யின் ஆசிரியரானவர்

### திரு கே. ஏ.மதியழகன்

[உணவு மந்திரி]

திராவிட கழக அங்கத்தவராகஇருந்து 49-ம் ஆண்டு திரு. அண்ணாதுரையுடன் வெளியேறி தி.மு.கழகத்தை அமைத்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்து பட்டம் பெற்றவர். சட்டக் கல்லூரியில் பயின்ற போதிலும், சட்டப்படிப்பை நிறைவேற்றவில்லை. அரசியல் நடவடிக்கைகள் காரணமாக 7 முறை சிறைசென்றார். வார அரசியல் ஏடொன்றின் ஆசிரியர்.

### திரு, ஏ. கோவிந்தசாமி

[விவசாய மந்திரி]

தமிழ்நாடு உழைப்பாளர் கட்சியின் அபேட்சகராக 1952-ல் போட்டியிட்டு, சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். 1957-ல் தி. மு. க.வின் சார்பில் வில்லிபுரம் தொகுதியிலிருந்து மீண்டும் சட்டசபை அங்கத்தவரானார். இவர் தமது வாழ்க்கையை சாதாரணகிளார்க்காக ஆரம்பித்தார்.

### திருமதி சத்தியவாணிமுத்து

[ஹரிஜன நல மந்திரி]

ஹோமியோபதி டாக்டராகத் தொழில் நடத்திய இவர், 1957-ல் சட்டசபை அங்கத்தவரானதும், அத்தொழிலைக் கைவிட்டார் அவர். தி. மு. க.வின் பிரச்சார காரியதரிசியாகத் தற்போது கடமையாற்றுகிறார். இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் முன்னணியில் பங்குபற்றிய திருமதி சத்தியவாணிமுத்து தடுப்புக்காவலில் வைக்கப் பட்டார்.

### திரு. எஸ். மாதவன்

[சட்ட மந்திரி]

தி. மு. க. மந்திரி சபையில் மிக இளையவர். வயது 34. இராமநாதபுரத்தில் உள்ள ஒரு தொகுதியிலிருந்து சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

### திரு. சாதிக் பாஷா

[சுகாதார மந்திரி]

உடுமலைப்பேட்டைப் பிரதிநிதியான இவர், அங்கு வழக்கறிஞராகத் தொழிலாற்றுகிறார். இவர் உடுமலைப்பேட்டைமாநகரசபையின் தலைவராக 1963-64-ல் பணியாற்றியுள்ளார்.

### திரு. எம. முத்துசாமி

[உள்ளூராட்சி மந்திரி]

சேலம் மாவட்டத்திலுள்ள நாமக்கல் தொகுதியிலிருந்து சட்டசபைக்குத் தேர்ந்தெடுச்கப்பட்டுள்ள இவரது வயது 38 ஆகும். சென்னைப் பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர் ஒரு பள்ளி ஆசிரியர். தேர்தலில் போட்டியிடுவதற்காக இவர் தமது தொழிலிலிருந்து ராஜினாமா செய்தார்.

---

## சிவராத்திரி விழா ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கைதடி இந்துவாலிபர் சங்கத்தின் ஆதரவில்கைதடி ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் கோவில், கைதடி மேற்கு முத்துக்குமாரசுவாமி கோவில், கைதடி வடக்கு கயிற்றசிட்டிக் கந்தசுவாமி கோவில் ஆகிய இடங்களில் மகா சிவராத்திரியை முன்னிட்டு கதாப்பிரசங்கம் சொற்பொழிவுகள், விசேஷ பூசைகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கைதடி கிழக்கு இந்துவாலிபர் மன்றம், கைதடி மேற்கு சிவராத்திரி தொண்டர் சபை, கைதடி வடக்கு பஜனைச்சபை ஆகியவை இவற்றை நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளன.

---

## எதிரிகளுக்கு வாரண்ட்

மாவிட்டபுரம், திங்கள்

சுழிபுரம் கொலை வழக்குஎதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தொகுப்புரை நிகழ்த்துவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது நீதிமன்றத்திற்கு 2ம் எதிரி வரவில்லையென்றும்அவரைத் தேடி மூன்றும் எதிரியும் போய் விட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. இதனால் நீதிபதி 2ம்,3ம் எதிரிகளைக் கைது செய்ய வாரண்ட் உத்தரவுபிறப்பித்துள்ளார்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

உத்தியோக

## மொழி கமிஷனர் புதிய தூதுவர்

கொழும்பு, திங்கள்

உத்தியோக மொழி இலாகாக் கமிஷனரான டாக்டர் நந்ததேவா விஜயசேகரா, ஏப்ரல் நடுப்பகுதியில் பர்மாவுக்குஇலங்கைத் தூதுவராக நியமிக்கப்படுவார்.

எமது தற்போதைய பர்மியத் தூதுவரான திரு. வி. சி. ஜயசூரியா, தமது பதவிக்கால முடிவில் இம்மாதம் பிற்பகுதியில் இலங்கை திரும்பவிருக்கிறார்.

1960-ல், டாக்டர் விஜயசேகரா, அப்போதைய உத்தியோக மொழி விவகார விசேஷ கமிஷனராக இருந்த திரு. எல். ஜே. டி. எஸ். செனிவரத்தினவைத் தொடர்ந்து பதவியேற்றார். உத்தியோக மொழி இலாகா உருவாக்கப்பட்டதும், டாக்டர் விஜயசேகரா கமிஷனராக நியமிக்கப்பட்டார்.

டாக்டர் விஜயசேகரா யுனெஸ்கோ, தேசிய கமிஷன் அங்கத்தவராவதுடன், கலாச்சார உப கமிஷனின் தலைவருமாவார். இவர் தத்துவத்துறையில் டாக்டர் பட்டம்பெற்றவர்.

## ''வடபகுதி...

[-1ம் பக்கத் தொடர்ச்சி]

உதவி மந்திரியும், விவசாயப்படைத் 'தளபதி'யுமான திரு. செனிவரத்ன தெரிவித்தார்.

### வடக்கிலிருந்து மிகக் குறைவு

விவசாயப்படைக்கு நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் இளைஞர்கள் மனுச்செய்துள்ளனரென்று கூறிய திரு. செனிவரத்ன, வடக்கு மாகாணத்திலிருந்து மிகவும் குறைந்த அளவிலேயே இளைஞர்கள் விண்ணப்பித்துள்ளனரென்று தெரிவித்தார்.

### 'தளபதி' கூறிய காரணம்

இக்கட்டத்தில் 'ஈழநாடு' நிருபர் விவசாயப் படைத் தளபதி திரு. செனிவரத்னவிடம் வடக்கு மாகாணத்திலிருந்து இளைஞர்கள் குறைவாக விண்ணப்பித்ததற்குக் காரணம் என்னவென்றும், அரசியல்சம்பந்தமாக இருக்குமாவென்றும் கேட்டார்.

இக்கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் வடக்குமாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்ட இளைஞர்களுக்கு விவசாயப்படை புதிதல்லவென்றும், அந்த இளைஞர்கள் தங்களது பெற்றோருடனும், உறவினர்களுடனும் ஏற்கனவே விவசாயம் மற்றும் உப உணவு உற்பத்தித் திட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனரென்றும் கூறினார்.

யாழ்ப்பாண இளைஞர்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு உணவு உற்பத்தியில் அதிக் கவனம் செலுத்திவருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

### முதலாவது முகாம்

விவசாயப்படையின் முதலாவது முகாமை இம்மாதம் 30-ந் திகதி குருணகலை மாவட்டத்தில் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா ஆரம்பித்துவைப்பார். இந்த முகாமில் 345 இளைர்கள் இருப்பார்கள்.

''இலங்கை இராணுவத்தில் ஆறாயிரம்பேர் மட்டுமேஇருக்கின்றனர். ஆனல் விவசாயப்படை பதினையாயிரம் பேரைத் திரட்டும். இக்கட்டத்தில் எமக்குப் பொறுப்பும் கஷ்டமும் அதிகமாக இருக்கும் ஆரம்பத்தில் 345 இளைஞர்களைக்கொண்ட முதலாவது முகாம் திறக்கப்படும். அத [illegible] முகாம் [illegible] ஆரம்பிக்கப்படும். மாவட்ட

## முஸ்லிம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### ஜி. ஜி. பேச்சு

யாழ்ப்பாணம் எம். பி. யும் தமிழ் காங்கிரஸ் தலைவருமான துரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பிரேரணையைஆதரித்துப் பேசுகையில் கூறியதாவது:

பௌத்தமத சார்புள்ள பல்கலைக்கழகங்கள் இங்கு இருக்கின்றன. இதனல் பௌத்த மதத்துக்கு இங்கு அதற்குரிய இடமளிக்கப்பட்டுள்ளது. இதேபோல் இந்து மதத்தவர்களுக்கும் அவர்களுக்கென ஒரு உரிய இடம் இருப்பது அவசியம்.

### டாக்டர் நாகநாதன்

நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதன் இப்பிரேரணைமீது பேசுகையில்கூறியதாவது:

முஸ்லிம் கலாசார பல்கலைக்கழகம் என்பதைவிட முஸ்லிம் பல்கலைக் கழகம் என்றிருந்தால் நல்லதாக இருந்திருக்கும்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல்கலைக் கழகங்கள்அதிகம் அமைக்ம நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.''

---

## தமிழ்நாட்டு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வம் முடிவுற்றது. ராஜாஜி மண்டபத்தில், முன்னாள் சபாநாயகர் செல்லபாண்டியன். மேல்சபைத் தலைவர் திரு. மாணிக்கவேலு, ராஜாஜி ஆகியவர்கள் உட்பட சுமார் 500 பிரமுகர்கள் கூடியிருந்தார்கள்.

பதவிப் பிரமாணம் முடிந்தபின் திரு. அண்ணாதுரை நேரே முதன்மந்திரி அலுவலகத்துக்கு சென்று தமது அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டார். அங்கு அவருடைய அந்தரங்க காரியதரிசி திரு. கே. சொக்கலிங்கம் மாலை அணிவித்து வரவேற்றார்.

மந்திரிசபையின் இரண்டாவது பட்டியலை எப்பொழுது வெளியிடுவீர்கள் என்று நிருபர்கள் கேட்டதற்கு திரு. அண்ணாதுரை பதிலளிக்கையில், ''மற்றையப் பட்டியல் இப்போதைக்கு இல்லை'' என்று கூறினார்.

துணை மந்திரிகளைப் பொறுத்தவரை அவர்களின் தேவை ஏற்படும்பொழுது கவனிக்கப்படுவார்கள் என்றும் இப்போதைக்கு துணைமந்திரிகள் எவரும் நியமிக்கப்படமாட்டார்கள் என்றும் திரு. அண்ணாதுரை கூறினார்.

தற்பொழுது பதவியேற்றுள்ள மந்திரிகள் சிலர் கட்சியின் வளர்ச்சியைக் கவனிக்கும்பொருட்டுஇடையே ராஜினாமாச் செய்வார்கள் என்றும் அப்பொழுது புதிய மந்திரிகள் நியமிக்கப்படுவார்கள் என்றும் அண்ணாதுரை கூறினார்.

இன்று தி. மு. க. மந்திரி சபை பதவியேற்றதை முன்னிட்டு தமிழ்நாட்டின் பல இடங்களில் ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

---

## பஸ் டிப்போ

கோண்டாவில், திங்கள்

கோண்டாவில் மத்திய பஸ் டிப்போவின் வேலைகள் தற்பொழுது பூர்த்தியடையும் கட்டத்தில் உள்ளன

---

காரியாதிகாரி அலுவலகங்களில் இப்பொழுது நேர்முகப்பரீட்சை நடைபெறுகிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் மற்றும் இரத்தினபுரி, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலும் கடைசியாக நேர்முகத் தேர்வு நடைபெறும்'' என்றும் உதவிமந்திரி திரு. செனிவரத்ன கூறினர்.

## அபராதம

மாவிடடபுரம். திங்கள்

பொலிஸாரால் குற்றசாட்டப்படாத ஒருவர்தண்டனை பெற்ற சம்பவம் மல்லாகம் நீதிமன்றத்தில் நடந்தது.

புன்னலைக்கட்டுவனை சேர்ந்த மூன்று சகோதரர்கள் மீது சட்டவிரோதமாக 52 றூத்தல் வெடிமருந்து வைத்திருந்தாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. விசாரணையின் போது எதிரிகளின் வழக்கறிஞர்வெடிமருந்துமற்றொருவருக்குச்சொந்தமானதென்று கூறி அவரை ஆஜர் செய்தார் நீதிபதி குட்டியர் செல்வத்துரை என்ற அந்த நபருக்கு 250 ரூபா அபராதம் விதித்தார்,

---

## 50 ரூபாய் அபராதம்

மாவிட்டபுரம், திங்கள்

பண்டத்தரிப்பைச் சேர்ந்த சுப்பிரமணியம் செல்வராசா என்பவர் 16கிறேன்ஸ் கஞ்சா வைத்திருந்ததாகப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் மல்லாகம் நீதிபதி 50ரூபாய் அபராதம் செலுத்தும்படி உத்தரவிட்டார்.

---

## இளைஞன் தற்கொலை

மீசாலை, ஞாயிறு

மீசாலை தெற்கைச் சேர்ந்த செல்லர் ஆறுமுகம் என்பவரின் 23 வய்து மகனை இராசரத்தினம் நேற்று நச்சுத்திராவகம் அருந்தித்தற்கொலை செய்து கொண்டார்.

இந்த இளைஞருக்கு விருப்பமில்லாத ஒரு பெண்ணை திருமணம் செய்வதற்குப் பெற்றோர் ஏற்பாடு செய்திருந்ததாகவும், இதனல் மனமுடைந்து தோட்டப் பாவனைக்கு வாங்கிவைத்திருந்த நச்சுத்திராவகத்தை குடித்ததாவும் கூறப்படுகிறது. திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கே. திரவியநாயகம், மரண விசாரணை நடத்திய பின்னர் தற்கொலை எனத்தீர்ப்பளித்தார். இளைஞன், இறந்து கிடந்த இடத்தை சுத்தம் செய்த கந்தையா சுப்பிரமணியம் என்பவர், அதே இடத்தில் மயக்கமடைந்து அபாயகரமான நிலையில், சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

---

## ஜப்பான்துணி

கோண்டாவில், திங்கள்

கோண்டாவில் ஐக்கிய பண்டகசாலையில் ஜப்பான் கால்சட்டைத் துணி நேற்று விநியோகம் செய்யப்பட்டது. சுமார் 260 அங்கத்தவர்களைக் கொண்ட இப்பண்டகசாலைக்கு 46 யார் துணி மட்டுமே வழங்கப்பட்டதாகவும் 14 பேருக்கு மட்டுமே சிட்டிழுப்பின் மூலம் துணி வழங்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது

---

## வாசிகசாலை இல்லை

உடுப்பிட்டி, திங்கள்

உடுப்பிட்டிப் பகுதியில் பொதுவாசிகசாலை ஒன்று இல்லாமல் இருப்பதால் மக்களும் குறிப்பாக மாணவர்களும்மிகவும்அசௌகரியத்துக்குள்ளாகியிருக்கிறார்கள். சென்றவருடம் டிசம்பர்மாதம் உடுப்பிட்டி கிராமசபையின் வரவு செலவுத்திட்டத்தில் கிராமசபைக்குப் புதிய கட்டடம் நிறுவுவதற்கும், நூல்நிலையம் அமைப்பதற்கும் சுமார் 25000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாதிருப்பதால் பொது மக்கள் அதிருப்தி அடைந்துள்ளதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org